
www.tamilarangam.net

தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT

# தேசபக்தன்

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT



- ★ 'தாய்லாந்து பேச்சு வார்த்தை' வெற்றி பெற...
- ★ தமிழீழ இடதுசாரிகள் மீண்டும் புத்துயிர்ப்பு பெற...
- ★ தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலம்...
- ★ தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ்த் தேசிய சக்தியா?...

NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)

★ 'தாய்லாந்து பேச்சு வார்த்தை' வெற்றி பெற தமிழீழ மக்களின் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் 1

★ புலிகள் தீர்மானகரமான சக்தியா? தலைமைச் சக்தியா? 10

★ தமிழீழ இடதுசாரிகள் மீண்டும் புத்துயிர்ப்பு பெற வேண்டும் 13

★ விசுவா எனும் மானுடன் 21

★ தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலம் 30

★ தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ்த் தேசிய சக்தி ஆகுமா? 42

★ போராளிகளே! திரும்பிப் பார்ப்போம்... 48

★ நிரந்தர யுத்த நிறுத்தம்! தமிழீழ அகதிகளின் கோரிக்கை 54

**NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM**

# N D P T

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'தாய்லாந்து பேச்சுவார்த்தை' வெற்றி பெற... தமிழீழ மக்களின் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சனையும், தேசியக் கோரிக்கைகளும், பேச்சுவார்த்தை மூலம் சமாதானமாக தீர்த்துவிட முடியும் என்று நம்பி, சிறீலங்கா அரசுக்கும் - தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள **நிரந்தர யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)** தாய்லாந்து பேச்சு வார்த்தை வெற்றி பெற வேண்டும். ஆனால் தமிழீழ மக்கள் இரத்தம் சிந்தி வளர்த்த தேசியக் கோரிக்கைகள் பேச்சுவார்த்தை வழியாக தீர்க்கப்படுமா? தேசிய விடுதலையை சாதிக்க முடியுமா? யுத்த நிறுத்தம், நிரந்தரமாக தொடருமா? இதற்கு இன்று எந்த உத்தரவாதமும் இல்லை. இதுதான் தமிழீழ மக்களின் நிலை. **''இந்த சமாதான முயற்சி அவ்வளவு இலகுவானதல்ல, இலகுவானதல்ல எனில் விழிப்புணர்வும் எச்சரிக்கையும் அவசியமானது''** பிரதமர் ரணில், சிறீலங்காப் படையினருக்கு ஒப்பந்தத்தின் பின் கூறிய நற்செய்தி இது. எதிரி விழிப்புடன் இருக்கிறான்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கின்ற புலிகள் இயக்கம், எத்தகைய அரசியல் - அதிகாரக் கோரிக்கைகளை முன் வைக்கப் போகின்றது? சிறீலங்கா அரசு எந்தளவுக்கு புலிகளின் கோரிக்கைகளை அங்கீகரிக்கப் போகிறது. இருதரப்பின் உத்தேச தீர்வுத் திட்டம் என்ன? புலிகளையும் - சிறீலங்கா அரசையும், நோர்வே உட்பட, இரண்டு தரப்புடன் தொடர்புள்ள உலக அரசுகள் - நிறுவனங்கள் எவ்வளவு தூரம் இரண்டு தரப்பையும் சமரசப்படுத்த அழுத்தப் போகின்றன என்பதில் இருந்தும், புலிகளின் தலைமை, தங்களின் கோரிக்கைகளில் எவற்றைக் கைவிட்டு, எந்த மட்டத்துக்கு கீழ் இறங்கத் தயாராக இருக்கும் என்பதைப் பொறுத்து யுத்த நிறுத்தத்தின் கால அளவு தீர்மானிக்கப்படப் போகிறது.

www.tamilarangam.net



புலிகள், புலிகள் மட்டுமே. தமிழீழ மக்களின், விடுதலைப் போராட்டத்தின் ஒரே ஒரு அரசியல் - இராணுவச் சக்தி, ஏகப்பிரதிநிதிகள் என்பதை அங்கீகரித்துள்ளவர்கள். புலிகளின் கோரிக்கைகள், தீர்மானங்களுக்கு அப்பால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் **தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம், அடிப்படையில் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசிய விடுதலைப் போராட்டம்,** விடுதலை யுத்தம். இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில், தேசிய விடுதலை என்பது, சமூகப் புரட்சிப் போராட்டத்தில் இருந்து பிரிக்க முடியாத நீண்ட விடுதலைப் போராட்டம். நீண்ட கால மக்கள் யுத்தம் ஏகாதிபத்திய தேசிய ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை பெறாத தேசிய இன விடுதலை என்பது, பொய்யானது, ஏமாற்றானது. உலக ஏகாதிபத்திய சமூக அமைப்புடன் சமரசம் செய்து கொள்வது என்பது அடிப்படையில் உள்நாட்டு இனவாத அரசுடன், ஆளும் வர்க்கங்களுடன் சமரசம் செய்வதாகவே இருக்கும். இது தமிழீழ மக்கள் சிந்திய இரத்தத்துக்கு துரோகம் செய்வதாக அமைந்துவிடும்.

புரட்சிகர தேசிய விடுதலை அரசியலை நிறுவி, உண்மையான தேசிய சுதந்திரத்தை பெறுவதற்காக, தங்கள் இன்னுயிரை தமிழீழ மண்ணுக்கு ஈய்ந்த போராளிகளின் கனவுகளுக்கு துரோகம் செய்யக் கூடாது. யுத்த நிறுத்தம் தொடர - பேச்சுவார்த்தை வெற்றி பெற, நீதியான அரசியல் தீர்வு, சமாதானம் - அமைதி ஏற்பட வேண்டும். இதற்காக தமிழீழ புரட்சிகர சனநாயக சக்திகள்' நீதியான 21 அம்ச கோரிக்கைகளை உள்நாட்டு மக்கள், உலக மக்கள், மற்றும் சிறீலங்கா அரசுக்கும், புலிகளுக்கும் முன் வெளிப்படையாக முன் வைக்கிறோம்.

**1.** *மூன்றாவது நாட்டின், சர்வதேச நிறுவனத்தின் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடப்பது, கண்காணிக்கப்படுவதற்கு அப்பால், எந்த மூன்றாவது நாட்டின் படைகளும், சர்வதேச நிறுவனங்களின் (அய்நா அமைதிப்படை...) ஆயுதம் தாங்கிய படைகளும் சரி, ஆயுதம் தாங்காத கண்காணிப்பு படைகளும் சரி உள்நாட்டுக்குள் தலையிடக்கூடாது.*

**2.** *திம்புக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.*

www.tamilarangam.net



**3.** சிறீலங்கா அரசு என்ற பெயர் மாற்றப்பட்டு இலங்கை அரசு எனப் பெயர் மீள சூட்டப்பட வேண்டும். இலங்கையில், சிறீலங்கா - தமிழீழம் என இரண்டு மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும், தேசிய சமவுரிமையுள்ள மாநிலங்களின் ஒன்றியமான இலங்கை, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில், நாட்டின் பாதுகாப்பு (அன்னிய ஆக்கிரமிப்பு எதிராக மட்டும்) நிதி, வெளியுறவுத்துறை தவிர மற்றைய அனைத்தும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

**4.** எக்காரணம் கொண்டும் மாநில அரசை கலைக்கும் அதிகாரம், ஒன்றிய அரசுக்கு இருக்கக் கூடாது; ஒன்றிய அரசின் நியமனங்கள், பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் மாநில அரசுடன் ஆலோசிக்கப்பட்டு, ஒப்புதலுடன் அமுல்படுத்தப்பட வேண்டும்.

**5.** தமிழீழ மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் முஸ்லீம் மக்களுக்கு ஒரு 'சுயாட்சிப் பகுதி' ஏற்படுத்த வேண்டும். சுயாட்சிப் பகுதியின் சிவில் நிர்வாகம், பொலிசில், முஸ்லீம்களின் பகுதி வீதப் பிரதிநிதித்துவம் அமுல்படுத்தப்பட வேண்டும். சொந்த வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள், உரிய நிவாரணங்களுடன் குறித்த கால அளவுக்குள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். பறிக்கப்பட்ட சொத்துக்கள் உடனடியாக திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

**6.** சிறீலங்கா மாநிலத்தில் மலையகத் தமிழ் மக்களுக்கு ஒரு 'சுயாட்சிப் பகுதி' ஏற்படுத்த வேண்டும், சுயாட்சிப் பகுதியின் சிவில் நிர்வாகம், பொலிசில், மலையகத் தமிழ் மக்களின் பகுதி வீதப் பிரதிநிதித்துவம் அமுல்படுத்தப்பட வேண்டும். சிறீலங்காவிலும், தமிழீழத்திலும் உள்ள அனைத்து மலையக மக்களுக்கும் குடியுரிமை, வாக்குரிமை வழங்கப்பட வேண்டும். தமிழீழப் பகுதியில் வாழ்கின்ற, வாழ

www.tamilarangam.net



விரும்புகின்ற மலையக மக்களுக்கும், மலையகத்தை சேர்ந்த போராளிகளுக்கும், தமிழீழத்தில் நிரந்தரமாக வாழ்வதற்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டும்.

**7.** சிறீலங்கா அரசால் 1972-களுக்குப் பின், தமிழீழப் பகுதியில் செய்யப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் குறித்த கால எல்லைக்குள், அகற்றப்பட வேண்டும். இதில் திட்டவட் டமான கால அளவும், அமுல்படுத்தலும் இருக்க வேண்டும்.

**8.** பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம், தேசிய பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைத்து தமிழ், முஸ்லீம், மலையகப் போராளிகளும், போராட் டத்தை ஆதரித்தவர்களும் என அரசியல் கைதிகள் உடன டியாக விடுதலை செய்யப்பட வேண்டும்; (பொய்க் குற்றச் சாட்டுக்களின் கீழ்) வழக்கு பதிவு செய்யப்பட்டவை திரும்பப் பெறப்பட வேண்டும்.

**9.** தமிழீழத்தின் சிவில் சமூக அமைப்பு, பொலிஸ்துறை முழுவதும், மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண் டும். தமிழீழ மாநில அரசியல் - அதிகாரத்தில், நீதித்துறையில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு கண்டிப்பாக அமுல் படுத்தப்பட வேண்டும்.

**10.** சிறீலங்கா இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிசு என முழுப்படையினரும், தமிழீழத்தில் இருந்து வெளியேற வேண்டும். ஒன்றியரசின் முப்படைகள் எல்லா வற்றிலும் தமிழ்ப்படைப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண் டும். எல்லா இயக்கங்களின் போராளிகளும், தமிழ் மக்க ளும் (ஆண் - பெண்) படைப் பிரிவுகளில் இணைக்கப்பட வேண்டும். (தமிழீழத்தில், 1983-இல் இருந்த நிலைமைக்கு, அரசு படைக் குறைப்பு - முகாம் குறைப்பு செய்வது, முகா முக்குள் முடக்கி வைத்திருப்பது ஏற்றுக் கொள்ள முடி யாது.)

www.tamilarangam.net



**11.** தேர்தல் ஆணையம், மாநில சட்டமன்றம் அமைத்தல், சட்டமன்றத் தொகுதிகளை குடிசன மதிப்பீட்டு அடிப்படையில் சமமாக உருவாக்குவது, அமைச்சரவை, முதலமைச்சரை தேர்ந்தெடுக்கும் முறைகள், மாநில நிதி ஆணைக்குழு, மாநில நீதிமன்ற அமைப்பு, மாநில அரச சேவை இவை முழுவதும் மாநில அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். மக்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதியை, எந்த நேரத்திலும் தொகுதி மக்கள் திருப்பி அழைக்கும் உரிமை அரசியல் சாசன ரீதியில் இருக்க வேண்டும். இதற்கான தேர்தல் வடிவங்களும் குறிப்பான முறைகளும் உருவாக்கப்பட வேண்டும்.

**12.** மாநிலத்தின் எல்லைக்குட்பட்ட நிலத்தின் மேலான உரிமை, நிலப்பங்கீடு, துறைமுகங்கள் மீதான உரிமை, கடல் எல்லைகள் மீதான கட்டுப்பாடு, கடல் வளங்களை பயன்படுத்தும் உரிமை, கல்வி, உயர்கல்வி, கல்விக் கொள்கை வகுக்கும் உரிமை, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் சேவைத் துறைகள் முழுவதும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

**13.** தமிழீழப் பகுதியில் (தரையிலும் - கடலிலும்) சிறீலங்கா அரசு படைகளால், அரசு சார்பு ஆயுதக் குழுக்களால், விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகள், கண்ணி வெடிகள், பொறி வெடிகள் உள்நாட்டுக் கண்காணிப்பு குழு முன்னிலையில் உடனடியாக அகற்றப்பட வேண்டும். அதன் பின்னரே, அகதிகள் - இடம் பெயர்ந்தவர்கள் தங்கள் வீடுகளில் குடியமரவும், கடலில் மீன் பிடிக்கவும், விவசாய நிலங்களில் தொழில் செய்யவும் அனுமதிக்கப்படவேண்டும்.

**14.** யுத்தத்தால் இடம் பெயர்ந்து இலங்கைக்குள்ளும், அகதிகளாக இந்தியாவிலும், முகாம்களில் / இடைத்தங்கல் நிலையங்களில் / உறவினர் வீடுகளில் வாழும் தமிழ்,

www.tamilarangam.net



முஸ்லீம், மலையக மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல, குறிப்பிட்ட கால எல்லைக்குள் சொந்த இடங்களில் குடியமர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். வெளிநாட்டு வருமானம் இல்லாதவர்களுக்கு அரசு நிவாரண உதவிகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**15.** இந்தியாவில் அகதி முகாம்களில் உள்ள தமிழீழ அகதிகள், சிறப்பு முகாம் மற்றும் சிறைகளிலுள்ள போராளிகள் மிகக் குறுகிய காலத்தில், தமிழீழப் பகுதிகளில் வந்து குடியமர ஏற்பாடு செய்ய வேண்டும். வெளிநாடுகளில் உள்ள குடியுரிமை இல்லாத தமிழீழத்தவர்கள், குறிப்பிட்ட கால எல்லைக்குள் நாடு திரும்ப அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**16.** சிறீலங்கா அரசு, தமிழ் மக்களை - போராளிகளை அழிப்பதற்காக இதுவரை நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் கடன்சுமையை, தமிழீழ மக்களின் தலையில் மீண்டும் எந்த வகையிலும் சுமத்தப்படக்கூடாது.

**17.** தமிழீழ மக்களின் சேமிப்பை பேணவும், மூலதனத்தை சமூக வளர்ச்சிக்கு ஒழுங்கமைக்கவும், ‘‘தமிழீழ மக்கள் வங்கி’’ கண்டிப்பாக உருவாக்கப்பட வேண்டும். புலிகளின் வங்கி, அப்படியே தமிழீழ மக்கள் வங்கியாக மாற வேண்டும். அந்நியநாட்டு வங்கி, நிதித் தொழில் தமிழீழத்தில் அனுமதிக்கப்படக் கூடாது.

**18.** இலங்கை நாட்டின் பாதுகாப்பு, நிதி, வெளியுறவுத் துறை என்பன ஒன்றியரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற அதேவேளை, வெளிநாட்டு நிதி, தொழில், வணிகக் கொள்கைகளில் ஒன்றியரசு, மாநில அரசின் நலனுக்கு எதிரான முடிவுகளை எடுத்தால், மாநில அரசு அவற்றை மாநிலச் சட்டமன்றம் மூலம் நிராகரிக்கும் உரிமை கண்டிப்பாக

www.tamilarangam.net



இருக்க வேண்டும். (WTO) உலக வர்த்தக அமைப்பின் உடன்படிக்கையினை தமிழீழ மாநில அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது, சிறீலங்கா அரசின் தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக இரத்தம் சிந்திப் போராடிவரும் தமிழீழ மக்கள், தமிழீழத் தேசியத் தொழில்களை - வணிகத்தை நசுக்கும் WTO இன் கொள்கைக்கு எதிராக தொடர்ந்து போராடும் உரிமை உண்டு.

**19.** வெளிநாட்டு முதலீடுகள். கனரகத் தொழிற்துறை, உள் கட்டமைப்பு - அறிவியல் தொழில்நுட்ப துறைகளில் அனுமதிக்கப்படலாம். வெளிநாட்டு முதலீடுகளின் இலாபத்தில் 75% மீண்டும் உள்நாட்டு உற்பத்திக்கு திரும்ப முதலீடு செய்யப்பட வேண்டும், அன்னிய நேரடி முதலீடுகள் (FDI) கூட்டு முதலீடுகள் (FJI) 50 ஆண்டுகள் திரும்பப் பெற முடியாத சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கு தடையான வெளிநாட்டு முதலீடுகள், உலகமயமாக்கல், திறந்த பொருளாதாரக் கொள்கை, நவீன மயமாக்கல் என அனுமதிக்கக் கூடாது. வெளிநாட்டு முதலீட்டை கட்டுப்படுத்தும் முழு உரிமையும் மாநில அரசிடம் இருக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்தியை - வணிகத்தை பாதிக்கும், ஏற்றுமதி இறக்குமதி (EXIM) கொள்கை, அன்னியச் செலவாணியை ஈட்டுவது மட்டும் நோக்கிய கொள்கை அனுமதிக்கப்படக்கூடாது.

**20.** அரசு, மதச்சார்பற்ற அரசாக இருக்க வேண்டும். மத, சாதி நிறுவனங்களுக்கு அரசு எவ்வகையிலும் உதவி செய்யக் கூடாது. அன்னிய நாடுகளிலிருந்து மத சாதி அமைப்புகள் நிதி பெறுவது கட்டாயம் தடுக்கப்பட வேண்டும். அரசு தனியார் கல்வி - தொழில் - வணிக நிறுவனங்களில் மதச்சடங்குகள், மதப்பழக்க வழக்கங்கள், கோவில்கள் அனுமதிக்கப்படக் கூடாது. மத நிறுவனங்களின் மதமாற்ற நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் தடை செய்யப்பட வேண்டும். மத, சாதி, பிரதேச பெயரிலான அரசியல்

www.tamilarangam.net



கட்சிகள், சமூக சேவை நிறுவனங்கள் தடை செய்யப்பட வேண்டும்.

**21.** தமிழீழப் போராளிகளின் ஆயுதங்கள், சிறீலங்கா அரசிடமோ, மூன்றாவது தரப்பு சர்வதேசக் கண்காணிப்பு குழுவிடமோ, நேரடியாகவோ அல்லது தனியாக எக் காரணம் கொண்டும் ஒப்படைக்கப்படக் கூடாது. நேரடியாக மாநில, மத்தியரசின் படைகளில் இணைக்கப்படுவதன் மூலம் மட்டும் மாற்றப்பட வேண்டும்.

இலங்கையில் இனப் பிரச்சனை தீரவும், அரசியல் தீர்வு ஏற்படவும், 'தமிழீழ புதிய சனநாயக கட்சி' முன் வைத்துள்ள இக்கோரிக்கைகளுடன் இணக்கம் ஏற்படும். இலங்கையிலுள்ள (தமிழீழம் - சிறீலங்கா) மற்றைய கட்சிகள், முன்னணிகள், இயக்கங்கள், வெகுசன அமைப்புகளுடன், இக்கோரிக்கைகளை கூட்டாக பிரச்சாரம் செய்யவும், இதற்காக கூட்டுப் போராட்டங்களில் ஈடுபடவும், தமிழீழ புதிய சனநாயக கட்சி வெளிப்படையாக அறைகூவல் செய்கின்றது.

இலங்கைக்கு வெளியே, உலகளவில் எந்த நாடுகளிலும், தமிழீழ மக்களின் - தேசத்தின் நலனுக்கான இக்கோரிக்கைகளை அங்கீகரிக்கும், அந்நாட்டு மக்கள் அமைப்புகளுடன், அந்த நாடுகளில் உள்ள தமிழீழ அகதி / புலம் பெயர்ந்த அமைப்புகளுடன், மற்றும் அந்நாட்டு அகதி / வெளிநாட்டு அகதி அமைப்புகளுடன் கூட்டுச் சேர்ந்து (அய்க்கியப்பட்டல்ல) பிரச்சாரம், ஆதரவுப் போராட்டங்கள் செய்ய, அந்நாடுகளிலுள்ள தமிழீழ புதிய சனநாயக கட்சியின் வெளிநாட்டுக் கிளைகள் வெளிப்படையாக அறைகூவல் செய்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் - போரில் தமிழீழ மக்களும், குறிப்பாக தொழிலாளர்களும், விவசாயிகளும், மீனவர்களும், நடுத்தர வர்க்க மக்களும் மிக அதிகளவு தியாகம் செய்து வருகிறார்கள். வாழ்வா - சாவா என அரசு கட்டுப்பாட்டுப் பகுதி

www.tamilarangam.net



/ புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், அரசின் பொருளாதார, மருத்துவ தடைகள் மத்தியில், கல்வி - தொழில் நெருக்கடியில் தேசத்தை விட்டு வெளியேறாது. உயிர் பிழைத்து வாழ்ந்திருக்கிறார்கள், போராடுகிறார்கள். தமிழீழ விடுதலை யுத்தத்துக்குநேரடியாக - மறைமுகமாக உயிராதாரமாக விளங்கி வந்திருக்கிறார்கள். உயிரைக் காப்பதற்காக இலட்சம் அகதி மக்கள், இந்தியாவில், வெளிநாடுகளில் அகதிகளாகவுள்ளனர். தமிழீழ உழைக்கும் மக்களின் வாழ்வில் ஒரு முன்னேற்றத்தை, யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை — அரசியல் தீர்வு ஏற்படுத்த வேண்டும். இக்கடமையை நிறைவேற்றாத இராணுவத் தீர்வோ, அரசியல் தீர்வோ, பெரும்பான்மை தமிழீழ மக்களுக்கு செய்யும் வரலாற்றுத் துரோகமாகும். மக்களின், தேசத்தின் நலனில் - முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட அனைத்து தமிழீழ அரசியல் சக்திகளும், கட்சிகளும், முன்னணிகளும், வெளியீடுகளும் தேசநலன் - மக்கள் நலன் என்ற இலக்கில் இக்கோரிக்கைகளை மறுபிரசுரம் செய்து மக்களிடம் கொண்டு செல்லுங்கள்.

*புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளே! இக்கோரிக்கைகளை எட்டுத் திக்கும் பரப்புங்கள், மக்களை அணி திரட்டுங்கள். கூட்டுப் போராட்டங்களை நடத்துங்கள்.*

**மத்திய குழு**
**தமிழீழ புதிய சனநாயகக் கட்சி**
**N D P T**

www.tamilarangam.net



# புலிகள் தீர்மானகரமான சக்தியா? தலைமைச் சக்தியா?

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை, தொழிலாளி வர்க்க அரசியல் பாதையில் ஒரு புரட்சிகர தேசிய விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்க வேண்டியது இன்றைய வரலாற்றுத் தேவையாகும். ஒடுக்கப்படுகின்ற தேசிய இனத்தின் தேசிய விடுதலையும், ஒடுக்கப்படுகின்ற தமிழ்த் தேசிய இனத்திலுள்ள சுரண்டப்படுகின்ற புரட்சிகர வர்க்கங்களின் சமூக விடுதலையும், தமிழீழ புரட்சிகர தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமையினாலேயே வெல்லப்பட முடியும். அவ்வாறு வெல்லப்படும் அரசானது, சிறீலங்கா அரசின் இன ஒடுக்கு முறையில் இருந்தும், உலக வல்லரசிய ஒடுக்கு முறையிலிருந்தும் விடுதலை பெற்ற சுதந்திர தமிழீழ அரசாக இருக்கும். தமிழீழ உழைக்கும் மக்களின் அரசியல் இலக்கு இது.

இத்தகைய இலட்சிய நோக்கில் ஒரு சில புரட்சிகர தேசிய விடுதலை அமைப்புகள் உருவாகின. புலிகள் உட்பட குட்டி முதலாளிய இயக்கங்களின் தடைவிதிப்பு, அச்சுறுத்தல், அழித்தொழிப்பு முயற்சிகளை ஆரம்ப காலங்களில் இவ்வமைப்புகள் எதிர் கொண்டன. போராட்டத்தில் இவ்வமைப்புகள் - முக்கியமாக இதன் தலைமைகள், புற-அக நெருக்கடிகளை அதற்குரிய முறைகளில் எதிர்கொண்டு மக்களிடம் நிலை கொள்ளத் தவறின. உறுதியாக நின்று போராட்ட முறைகளை - வடிவங்களை பரிசோதனை செய்த சில தலைமைச் சக்திகளின் இழப்புக்களுடன், அடுத்த கட்ட தலைமைச் சக்திகள் போராட்ட களத்தில் இருந்தே பின்வாங்கிக் கொண்டன. குறைந்த பட்சம் தங்களது அமைப்புக்களை ஒரு அரசியல் சக்தியாகக் கூட தக்க வைக்க முடியவில்லை.

புலிகள் உள்ளிட்ட குட்டி முதலாளிய இயக்கங்களினால் இவ்வமைப்புக்கள் அழிக்கப்பட்டது என்று சொல்வதை விட, போராட்டத்தை நடைமுறையில் முன்னின்று நடத்துவதற்கான வழிகாட்டல் தெளிவும் உறுதியும் தலைமைகளிடம் இல்லாத காரணத்தால் தாங்களாகவே சிதைந்து கொண்டன என்பதுதான் சரியானதாக இருக்கும்.

www.tamilarangam.net



குட்டி முதலாளிய இயக்கங்களில் இருந்தும், மேற்கண்ட அமைப்புக்களில் இருந்தும் வெளியேறிய புரட்சிகர ஆற்றல் கொண்ட சக்திகளால் உருவாக்கப்பட்ட கட்சிகள் கூட, போராட்டக் களத்தில் தாக்கம் மிக்க சக்திகளாக இன்றுவரை மாற முடியவில்லை. ஆனால் புலிகளுக்கு வெளியில், தேசிய விடுதலைப் போராட்டத்தில், ஒரு புரட்சிகர அரசியல் சக்திகளாக தங்களை வெளிப்படுத்தி வருகின்றன.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கிய கட்டங்களில் இக்கட்சிகளின் தலைமைகளில் கூட ஊசலாட்டங்களும் கலைப்புவாத கண்ணோட்டங்களும் வெளிப்பட்டன. வெளிப்படுகின்றன.

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்த காலத்தில், புலிகள் நடத்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை, புலிகள் இயக்கம் தொடங்கிய அரசியல் இயக்கத்தை பார்த்து, புலிகள் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ''தலைமைச் சக்திகள்'' என்ற நிலைப்பாட்டை முன்வைத்து, இறுதியில் புலிகளுடன் சேர்ந்து செயற்படுவது என்ற முடிவுக்கு, புரட்சிகர கட்சியில் இருந்த சில தலைவர்கள் சென்றனர். புரட்சிகர கட்சியை கலைக்கும், புலிகளின் வாலாக புரட்சிகர இயக்கத்தை மாற்றும் அவர்களது முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டது. இறுதியில் தனிநபர்களாக புலிகளின் இயக்கத்தில் சேர்ந்தனர்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் - விடுதலை யுத்தத்தில் புலிகள் இயக்கம் ஒரு ''தீர்மானகரமான சக்தியாக'' இருந்து வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களின் ஏகப்பிரதிநிகள் என்ற நிலைப்பாட்டை புலிகளும், தமிழ் தேசிய கூட்டமைப்பும் இன்று முன்தள்ளுகின்றன. புலிகள் ஏகப் பிரதிநிதிகள் அல்ல என்பதை முன்வைக்கும் சக்திகள், 'புலிகள் போராட்டத்தின் தலைமைச் சக்திகள்' என்ற தவறான பார்வையை முன்னிறுத்துகின்றன. புலிகளின் அரசியல் - இராணுவப் போராட்டங்களை தங்களின் போராட்டங்களாக, சரி - தவறுகளாக தேசத்தின் ஒரே பார்வையாக முன்வைக்கின்றனர்.

தேசிய விடுதலைப் போராட்டக் களத்தில் வெளிநாடுகளிலுள்ள அகதிகள் மத்தியில் தங்களின் புரட்சிகர அரசியலை நேரடியாக மக்களின் தினசரி வாழ்வில் நடைமுறைப்படுத்தி, மக்கள் போராட்டத்தில்

www.tamilarangam.net



பரிசோதிக்க முடியாத நிலையில் உள்ள புரட்சிகர அரசியல் வெளிப் படுத்தல்கள் இத்தகைய ஊசலாட்டங்களை - மயக்கங்களை கொண்டி ருப்பது கவனிக்கத்தக்கது.

புரட்சிகர கட்சிகள், தங்களை ஆழ்ந்த தொழிலாளி வர்க்க சித்தாந்த அரசியல் பார்வையில் திடப்படுத்துவதுடன், தமது திட்டத்தை தமது தலைமைச் சக்திகள் நேரடியாக மக்களுடன் இணைந்து செயற்படு வதன் மூலம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். புலிகளின் வெகுசன அரசியல் எழுச்சியை, அதன் இராணுவ அரசியல் பின்புலத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய இனத்தின் முதலாளித்துவ தேசிய விடுதலை இயக் கத்தை, தலைமைச் சக்தியாக ஏற்றுக் கொண்டு தொழிலாளிவர்க்க தேசிய விடுதலை சக்திகள் புரட்சிகர கட்சியை கட்டுவது என்பது கற்ப னையானது, இது தமிழீழ புரட்சிகர சக்திகளை கலைப்புவாதப் பாதைக்கே அழைத்துச் செல்லும்.

தமிழீழ புரட்சிகர சக்திகள், தமது சொந்தப் புரட்சிகர திட்டத்தின் அடிப்படையில் அடித்தட்டு மக்களிடம் அய்க்கியப்பட்டு, மக்களின் - தேசத்தின் கோரிக்கைகளுக்காக அனைத்து அரங்குகளிலும் - அனைத்து போராட்ட வடிவங்களிலும் உறுதியாக நின்று போராடும் போது மட்டுமே, தேசிய விடுதலைப் போராட்டத்தின் தீர்மானகர மான சக்தி என்ற பாத்திரத்தை புரட்சிகர கட்சி அடைய முடியும். புலிகள் போராட்டத்தில் தொடர்ந்து நிற்கும் போதே இதைச் சாதிக் கவும் முடியும். புலிகளுடன் பொது எதிரிக்கு எதிரான கூட்டு முன்னணி அமைத்துப் போராடவும் முடியும். ஆனால் தமிழீழ புரட்சிகர சக்தி களுக்கு, புலிகள் என்றும் தலைமைச் சக்திகளாக மாற முடியாது.

புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளே போராட்டக் களத்தில் ஊன்றி நிற்பதுடன் புதிய திசை விலகல்களை, புரட்சிகர அரசியலில் ஊன்றி நின்ற வெற்றி கொள்வோம்.

— ஆசிரியர் குழு

www.tamilarangam.net



# தமிழீழ இடதுசாரிகள் மீண்டும் புத்துயிர்ப்பு பெற வேண்டும்

இலங்கையில் தேசிய இன ஒடுக்குமுறையானது, மொழி அரங்கில், கல்வித் துறையில், வேலைவாய்ப்பில், பண்பாட்டுத் தளங்களில், பொருளாதாரத்தில், நில ஆக்கிரமிப்பு என வளர்ந்தது. உயர்ந்தபட்சமாக இனப்படுகொலை என்ற நிலைக்கு உயர்ந்தது.

இலங்கையின் தொழிலாளி வர்க்க (இடதுசாரி) இயக்கமானது தொழிற்சங்க - விவசாய சங்க இயக்கங்களில் முன்னுரிமையளித்து செயற்பட்டது. மிகப்பெரிய பொது வேலை நிறுத்தங்களை நடத்தியது. முக்கியமாக சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான சமூக சமத்துவ இயக்கத்தையும் தனது தலைமையில் நடத்தியது. பொருளாதார சமத்துவத்திற்கும் - சமூக சமத்துவதிற்குமான மக்கள் இயக்கத்தை சரியான புரிதலுடன் முன்னெடுத்தது.

தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் மொழி சமத்துவம், இன சமத்துவம் என்ற நிலைப்பாட்டை தொடக்க காலங்களில் இருந்தே முன் வைத்து வந்தது. சிங்களப் பெருந் தேசியவெறியையும் - தமிழ் குறுந்தேசிய வெறியையும் எதிர்த்து அம்பலப்படுத்தி வந்தது. சிங்கள - தமிழ் உழைக்கும் மக்களின் அய்க்கியத்தை வலியுறுத்தி நின்றது.

சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தில ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து இலங்கைத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலும் பிளவு ஏற்பட்டது. ஆனால் வரலாற்றில் தொழிற்சங்க இயக்கங்களே திரிபுவாத - சீர்திருத்த பாதைக்கு செல்வதில் முதல் முக்கிய பங்கு வழங்கி வந்த நிலையில், இலங்கைத் தொழிற்சங்க இயக்கம், தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஏற்பட்ட பிளவில் சீர்திருத்த-திரிபுவாத நிலைப்பாட்டை எதிர்த்து புரட்சிகர தொழிலாளி வர்க்க இயக்கத்தை திடப்படுத்தியது, சர்வதேச தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர முகாமிலும், இலங்கைத் தொழிலாளி வர்க்கமும், தோழர் சண்முகதாசனும் குறிப்பிடக்கூடிய பங்காற்றினார்.

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் திரிபுவாத முகாம், சமூகப் புரட்சி பற்றிய நிலைப்பாடுகளில் சீர்திருத்த - திரிபுவாத நிலைப்பாடுகளுடன், சிங்களப் பெருந்தேசிய வெறிக் கொள்கைகளையும் அர

www.tamilarangam.net



வணைத்துக் கொண்டது. அதேநேரம் புரட்சிகர தொழிலாளிவர்க்க முகாம், சிங்கள பௌத்த பெருந்தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்தது. ஆனால் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கான போராட்டத்தை தனது தலைமையில் முன்னெடுக்க தவறியது.

இனப்படுகொலை, நில ஆக்கிரமிப்பு, இன அழிப்பு என்ற நிலையில் தேசிய இன ஒடுக்குமுறை கோரத்தாண்டவம் ஆடிய போதும், சுயநிர்ணய உரிமை பற்றி பொத்தாம் பொதுவில் பேசிக் கொண்டிருந்தது, கட்சித் தலைமை. ஒடுக்கப்படும் தேசிய இனம் வாழ்வா - சாவா என்ற நிலைமையில் இருக்கின்ற போதும், சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரி மையை அங்கீகரித்து போராட்டத்தை முன்னெடுக்க முன் வரவில்லை. பதிலாக தமிழ் - சிங்கள தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை பிள வுபடுத்தும் முதலாளி வர்க்கத்தின் சூழ்ச்சிக்கு பலியாகக் கூடாது என அறிவித்தது. பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்தியங்களின் உலக சதிக்கு உடந்தை யாகி விடும். ஆயுதம் தாங்கிய குட்டி முதலாளிய இயக்கங்களின் போராட்டம் இறுதியில் ஏகாதிபத்தியங்களுக்கே நன்மை பயக்கும் என்றது. ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் - மக்களின் உரிமை பற்றி தீர்மானிப்பதற்கு பதிலாக போராட்டத்தை முன்னெடுக்கும். வர்க்கங் களின் குண இயல்புக்ளில் இருந்தும், போராட்டத்தை பயன்படுத்த முனையும் அன்னிய சக்திகளின் முயற்சிகளையும் காட்டி ஒடுக்கப் பட்ட தேசிய இனத்தின் உரிமையை அங்கீகரிக்க மறுத்தது. தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைமை தாங்கும் பொறுப்பை நிராகரித்தது. இலங்கைப் புதிய சன நாயக புரட்சியின் விசேடமான உள்ளடக்கத்தை புரிந்து கொள்ள தவ றியது. தமிழீழ - சிறீலங்கா மக்களின் போராட்டங்களை ஒன்றிணைக்க தவறியது.

தோழர் சண்முகதாசன் தலைமையை நிராகரித்து, மூன்றுலக கோட்பாடு, சனநாயக மத்தியத்துவம், தேசிய இனப் பிரச்சனை... போன்றவற்றில் முரண்பட்டு உருவான ''இலங்கை புதிய சனநாயக கட்சி'' கூட, தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய விடுதலை போராட்டத்தை அங்கீக ரித்து முன்னெடுக்கவில்லை. தேசிய விடுதலைப் போராட்டத்தினை புரட்சிகர தொழிலாளி வர்க்க இயக்கம் தனது தலைமையில் முன்னெ டுத்து, தொழிலாளி வர்க்க தலைமையை நிலைநிறுத்தி, தமிழீழ புரட்சி கர வர்க்கங்களை, மக்கள் திரளை, தொழிலாளி வர்க்க அரசியல் பாதையில் நேரடியாக அய்க்கியப்படுத்தும், புதிய சனநாயக அய்க்கிய

www.tamilarangam.net



முன்னணிக் கொள்கையை முன்னிறுத்தி இருக்க வேண்டும்; தமிழீழ மக்கள் மத்தியில் இருந்து வளர்ந்து வந்த தேசிய விடுதலையின் பக்கம் நின்ற குட்டி முதலாளிய - தேசிய முதலாளிய இயக்கங்களுடன் 'ஆக்கிரமிப்பு எதிர்ப்பு - முன்னணி'களை உருவாக்கி; தரகு முதலாளிய தலைமைகளை தனிமைப்படுத்தி இருக்க வேண்டும்; சக புதிய சனநாயக அமைப்புக்களை, உறுதியான விட்டுக் கொடுப்பற்ற ஆனால் முதிர்ச்சியான அணுகுமுறை கொண்ட கருத்துப் போராட்டங்களாலும், உறுதியான போர்முனை நடவடிக்கைகளாலும் படிப்படியாக அய்க்கியப்படுத்தி இருக்க வேண்டும். சர்வதேசிய தொழிலாளி வர்க்கப் பாதையுடன் - போராட்டத்துடன், தமிழீழ மக்களின் குறிப்பான தேசியப் பாதையும் - போராட்டமும் முரண்பாடற்ற முறையில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்; சர்வதேசியமும் - தேசியமும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடானதல்ல என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இத்தகைய சித்தாந்த அரசியல் கொள்கை நிலைப்பாடுகளை புரிந்து கொண்டு போராட்ட நடைமுறைகளிலும் ஈடுபடத் தவறிய தொழிலாளி வர்க்க கட்சி சிதையத் தொடங்கியது. தெளிவற்ற ஆனால் போராடும் உறுதியுள்ள கீழ் அணிகள், சந்தர்ப்பவாதமாக மார்க்சியம் பேசிய ஆயுதப் போராட்ட இயக்கங்களில் இணைந்து செயற்பட தொடங்கின. புதிய நிலைமைகளை புரிந்து கொண்டபோதும் தலைமை தாங்கிச் செல்லும் தகுதி இல்லாமல், கட்சித் தலைமைகளில் இருந்த சிலர், குட்டி முதலாளிய சந்தர்ப்பவாத மார்க்சிய இயக்கங்களில் அரசியல் ஆலோசகர்கள் ஆகினர்.

தொழிலாளி வர்க்க இயக்கம் எதிர்கொண்டிருந்த இத்தகைய நெருக்கடியான வரலாற்றுச் சூழ்நிலையில், தோழர் விஸ்வானந்த தேவன் மற்றும் சில தோழர்கள் சேர்ந்து 'தமிழ் மக்கள் சனநாயக முன்னணியை' உருவாக்கினர். இதன் தொடர்ச்சியில் 1981-இல் தமிழீழ தொழிலாளி வர்க்க கட்சியையும், தமிழீழ தேசிய விடுதலை முன்னணியையும் (NLFT) நிறுவினர்.

இலங்கைத் தொழிலாளி வர்க்க கட்சியின் வரலாற்று தொடர்ச்சியாக, கட்சியின் சரியான நிலைப்பாடுகளை தொடர்ந்து உயர்த்திப் பிடிப்பதிலும், தவறுகளை களைந்து, புதிய வழிகளை முன்னிறுத்துவதிலும் தமிழீழ தொழிலாளி வர்க்க கட்சியின் மதிப்பீடுகளை ஆழ்ந்து கவனிக்க வேண்டியிருக்கிறது, செழுமைப்படுத்த வேண்டியுள்ளது.

ஆனால் புரட்சிகர தேசிய விடுதலை முன்னணிக்குரிய அடிப்படை அரசியல் - அமைப்பு கொள்கைகளை NLFT முன்னிறுத்தி இருந்தது.

www.tamilarangam.net



ஒரு புரட்சிகர இயக்கம், புரட்சிகரமான சித்தாந்த அரசியல் கொள்கை களை கொண்டிருப்பது அடிப்படையான முதல் அம்சம் மட்டுமே. புரட்சிகரமான கொள்கை வெற்றி பெறுவது என்பது, புரட்சிகரமான அமைப்பு வழியும், அதன் கீழ் திரட்டப்படுகின்ற உறுதியான ஊழியர் களையும், ஊழியர்கள் புரட்சிகரமான மக்கள் பிரிவில் தங்கி நிற்ப தையும், குறிப்பான நிலைமைகளுக்கு தகுந்த குறிப்பான போராட்ட வடிவங்களை முன்னெடுப்பதிலும், அப்போராட்டங்கள் ஊடாக புடம் போட்டு உருவாக்கப்படும் புரட்சிகர தலைமையும் தான் முக்கிய பங்காற்றுகின்றது. இத்தகைய தகமைகளை கொண்டிராத இயக்கம் அது எவ்வளவு தூரம் புரட்சிகரமான அரசியலை கொண்டிருந்தாலும் போராட்டத்தில் தீர்மானகரமான சக்தியாக மாற முடியாது. NLFTயும், PLFTயும், TMPPயும் இதற்கு சிறந்த உதாரணம்.

இத்தகைய அம்சங்களில் இவற்றின் கொள்கை வழியிலான போதா மைகள், தலைமை கட்டப்பட்ட முறை, தோழர் விஸ்வானந்த தேவனின் புரிதல் இன்மைகள், சரி-தவறுகள் கவனத்தில் கொள்ளப்ப டவேண்டும். தவறுகளை கவனத்தில் கொள்வது என்ற பெயரில், தமி ழீழப் போராட்டத்தில் NLFT தீர்மானகரமான அமைப்பாக மாறாத நிலையையும், தோழர் விஸ்வா குறுகிய காலத்தில் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டி இறந்துவிட்ட நிலைமை யையும் முதன்மைப்படுத்தி காட்டி அவர்களின் சரியான அடிப்படை நிலைப்பாடுகளைக் கூட கைவிடுவதும், உயர்த்திப் பிடிக்க மறுப்பதும் மிகவும் தவறானது. 'தவறுகளை களைவது; கோட்பாடுகளை நிறு வுவது' என்ற பெயரில் சரியான நிலைப்பாடுகளையும், தோழர்களின் தியாகங்களையும் புதை குழிக்கு அனுப்பக் கூடாது.

NLFTஇன் சிதைவையும், தோழர் விஸ்வாவின் எதிர்பாரா மரணத் தையும் மட்டும் காட்டி, அவர்கள் 'தொழிலாளிவர்க்கப் பாதையில் இருந்து திசை விலகியதன் தோல்விதான் இது' எனப் பேசும் வாய்ச் சொல் வீரர்களான மார்க்சியர்கள், இன்றுவரை ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை. மக்களுக்கு அல்ல, கீழ் அணித் தோழர்க ளுக்கே இவர்களால் நம்பிக்கையளிக்கக் கூடிய தலைவர்களாக இருக்க முடியவில்லை. தங்களை வளர்த்துக் கொள்ள முடியவில்லை.

தமிழீழ புதிய சனநாயகப் புரட்சிப் போராட்டத்தை இன்றுவரை அங்கீகரிக்க மறுக்கும், இலங்கைப் புதிய சனநாயக புரட்சியை முன்னி றுத்தும், இலங்கை சோசலிசப் புரட்சியை முன்னிறுத்தும் இலங்கைத் தொழிலாளி வர்க்க சக்திகள். (இடதுசாரிகள்) புலிகள் இயக்கம் இன்று சென்று கொண்டிருக்கும் பாதையைச் சுட்டிக் காட்டி "குட்டி முதலா ளிய, முதலாளிய பிரிவினை இயக்கங்கள் ஏகாதிபத்திய முறைக்

www.tamilarangam.net



குள்தான் இரையாகுவார்கள்'' இதை நாங்கள் என்றோ சொல்லி விட்டோம்; என புலிகள் இயக்கத்தை மட்டுமல்ல. தமிழீழ தேசிய விடுதலை இயக்கத்தை கேலி செய்யும் தத்துவ விளக்கங்களை முன் வைக்கிறார்கள். ''தமிழீழ தேசிய விடுதலைப் புரட்சி என்பது கனவு, என்றும் உலக சோசலிசப் புரட்சிதான்'' எதார்த்தம் என்கின்றனர்.

தேசிய இன விடுதலைப் போராட்டத்தில், குட்டி முதலாளிய சுத்த இராணுவ இயக்கங்களின் சரண் அடைவை, தோல்வியை, தேசிய விடு தலை இயக்கத்தின் - மக்களின் தோல்வியாக காட்ட முனைகிறார்கள். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளாத தங்களின் தவறை மறைக்க நியாயம் கூறுகிறார்கள். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் இருந்து - தமிழீழ மக்களிடம் இருந்து அன்னியப்பட் டுள்ள இக்கட்சிகள் - தலைமைகள். குட்டி முதலாளிய ஆயுதம் தாங்கிய இயக்கங்களின் தடைவிதிப்பால்தான் தாங்கள் தமிழீழப் பகு தியில் செயற்பட முடியவில்லை என்கின்றனர்.

அப்படியானால், ''இலங்கைப் புதிய சனநாயக புரட்சி'', ''இலங்கை சோசலிசப் புரட்சி'' பற்றி அக்கறையுள்ள இச்சக்திகள், சிறீ லங்காவில் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு தீர்மானகரமான புரட்சிகர சக்திகளாக வெளிப்பட முடியாமல் இருப்பதற்கான காரணம் என்ன? J.V.P. போன்ற குட்டி முதலாளிய சந்தர்ப்பவாத மார்க்சிய திடீர் ஆயுத எழுச்சி இயக்கம் கூட, அப்பட்டமாக சிங்கள இனவாதப் பாதையில் சென்றுள்ள நிலையில், இத்தகைய தொழிலாளிவர்க்க சக்திகள் சிங்கள மக்களிடம் காலூன்ற முடியாமல் இருப்பதன் மர்மம் என்ன? இலங் கையை உலுக்கிக் கொண்டிருக்கும் தேசிய இனப் பிரச்சினையில், தேசிய விடுதலை யுத்தம் தொடர்பான நிலைப்பாடுகளில், பாராளு மன்றப் பாதை, ஆளும் வர்க்கம் குறித்த பார்வையில் (சிறீலங்கா சுதந் திர கட்சியை தேசிய முதலாளித்துவக் கட்சியாக, இலங்கை புதிய சன நாயக கட்சி பார்க்கிறது) சீர்திருத்த - திரிபுவாத நிலைப்பாடுகளே இவர்களிடம் ஆதிக்கம் செலுத்துகிறது.

இலங்கை புதிய சனநாயக கட்சியின் செயலாளர் செந்தில்வேல் (17.02.02) 'வீரகேசரியில்' எழுதிய கட்டுரையில் ''தோழர் சண்முக தாசன் காட்டிய பாதை சரியானது'' என்றும், இடது சாரி சக்திகள் இன்றைய உலகமயமாக்கலுக்கு எதிராக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார். நல்லது.

தோழர் சண்முகதாசனின் கட்சியில் இருந்து வெளியேறும் போது, செந்தில் வேலும் அவருடன் வெளியேறிய தோழர்களும், சண்முக தாசன் தலைமையிலான கட்சியுடன் எந்த் கொள்கைகளில் (4) முரண்

www.tamilarangam.net



பட்டு வெளியேறினார்கள். கிட்டதட்ட 20 வருடங்களுக்கு பின் தோழர் சண்முகதாசனின்ற கொள்கைகள் சரியானவை என்பதையும், தங்களின் முரண்பட்ட கொள்கைகள் எப்படி தவறானவை என்பதையும் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதை வெளிப்படையாக மக்கள் முன் வைக்க வேண்டும். சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியுடன் - அரசுடன், சீறிலங்கா சுதந்திரக் கட்சி அரசு உறவுகளை பேணியது. தேசியமயமாக்கல் கொள்கையை அமுல்படுத்தியதால் மட்டுமே சிறீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய முதலாளித்துவ கட்சியாகி விட முடியுமா? இத்தகைய தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டியுள்ளது. அப்போதுதான் இடது சாரி இயக்கம் மீண்டும் புத்துயிர் பெற முடியும்.

தோழர் சண்முகதாசனின் சரியான நிலைப்பாடுகளை உயர்த்திப் பிடிப்பதுடன், சண்முகதாசனே தனது தவறுகள் என சுயவிமர்சனம் செய்த அம்சங்களில், (உ.ம் கொம்யூனிஸ்ட் கட்சியையும் - தொழிற்சங்க இயக்கத்தையும் சமன்படுத்தி பார்த்தது) புரட்சிகர தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பார்வை என்னவாக இருக்க வேண்டும் என்பதையும் மக்கள் முன் வைக்க வேண்டும். அதற்கும் அப்பால் சண்முகதாசன் தேசிய இனப்பிரச்சினையில் எடுக்கத் தவறிய, மரணம் வரை காணத்தவறிய அம்சங்களையும், தோழர் விசுவானந்த தேவன் முன்நிறுத்திய நிலைப்பாடுகளை பற்றியும், இலங்கைத் தொழிலாளி வர்க்க இயக்கம் குறித்து ஒரு வரலாற்று ரீதியான சித்தாந்த அரசியல் புரிந்துணர்வு, திட்டவட்டமான நிலைப்பாடுகள் மேல்தான் தமிழீழம் - சிறீலங்காவின் புதிய சனநாயக சக்திகள் கூட்டிணைந்து போராட முடியும்.

இவ்வாறு இல்லாமல் ''சண்முகதாசனின் சரியான நிலைப் பாடுகள்'' என்ற சுலோகத்தின் அடிப்படையில் ஒன்றுபடுவது இடது சாரிகள் புத்துயிர்ப்பு பெறுவது என்பது தெளிவான - வரலாற்று ரீதியாக தவறுகளை திருத்திக் கொண்ட, அய்க்கியத்திற்கான அணுகுமுறை அல்ல.

இன்று இந்தியாவில் CPI, CPM கட்சிகள் அய்க்கியப்பட்டு, மூன்றா வது இடதுசாரி அணியை உருவாக்க வேண்டும். உலகமயமாக்கலால், வகுப்புவாதச் சக்திகளால் நாடு எதிர்கொள்ளும் சவாலை சமாளிக்க பரந்த இடதுசாரிகள் அணி உதயமாக வேண்டும் என CPI, CPM இன் தலைமையில் உள்ள சிலர் பேசிவருவதற்கு ஒப்பானதாகிவிடும். எனவே திரிபுவாத - சீர்திருத்தவாத கட்சிகள் அய்க்கியப்படுவதற்கு முன்மொழியும் மார்க்கமும், புரட்சிகர தொழிலாளி வர்க்க கட்சிகள் அய்க்கியப்படுவதற்காக பின்பற்றுகின்ற மார்க்கமும் அடிப்படையில் வேறுபாடானதாகும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளத் தவறக்

www.tamilarangam.net



கூடாது.

தோழர் விஸ்வானந்த தேவாவும், NLFT-யும் சகோதர நாட்டு கட்சிகள், இயக்கங்களுடனான உறவில் வெளிப்படுத்திய சரியான பார்வைகளையும் - தவறான பார்வை, அணுகுமுறைகளையும் கூட நாம் உள்வாங்கி செழுமைப்படுத்த வேண்டும்.

ஒரு நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட புரட்சிகர கட்சிகள் தேசிய இன விடுதலை அமைப்புகள் ஒரே பகுதியிலும், வெவ்வேறு பகுதிகளிலும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது, அத்தகைய புரட்சிகர கட்சிகள் தங்களுக்கு இடையில் கூட்டமைத்து போராடுகின்றன. அய்க்கியப் பட்ட கட்சியை உருவாக்க முயன்று வருகின்றன. அத்தகைய புரட்சிகர கட்சிகள், அமைப்புகள் அனைத்துடனும் நேரடியாக தொடர்புகளை பேணுகின்ற உரிமை - கடமை தமிழீழ புரட்சிகர கட்சிக்கு உண்டு. அதேவேளை அந்நாட்டு கட்சிகளுக்கு இடையிலான உறவை சீர்கு லைக்கக்கூடிய எத்தகைய செயற்பாடுகளிலும் அங்கும் - இங்குமான உரையாடல்களிலும் ஈடுபடுவது தவறானதாகும்.

இப்புரட்சிகர தொழிலாளி வர்க்க கட்சிகளுக்கு வெளியில் அந்நாடு களில் உள்ள கட்சி சாரா முற்போக்கு எழுத்தாளர்கள், கவிஞர்கள், கல்வியாளர்கள், மொழி, இன உணர்வு அமைப்புக்களுடன், தமிழீழ புரட்சிகர கட்சியின் தோழர்கள், முன்னணி அமைப்புக்கள், அகதி அமைப்புக்களின் தோழர்கள் ஆரோக்கியமான முறையில் தொடர்பு களை பேணும் உரிமையும் உண்டு. வெளிநாடுகளில் தமிழீழ புரட்சிகர தொழிலாளி வர்க்க கட்சியின் -முன்னணியின் தோழர்கள் தங்கியி ருந்து வேலை செய்யும் நிலமைகளை குறிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும், புரட்சிகர கட்சிக்கும் - கட்சிக்கும் இடையிலான உறவின் முக்கியத்துவத்தை, இரண்டாம் நிலைக்கு தள்ளி விடாத முறையில் கண்ணோட்டமும் செயற்பாடும் இருக்க வேண்டும். தோழர் விஸ்வா இந்த விடயத்திலும் ஓரளவு முன்நோக்குடன் செயலபட்டார்.

தோழர் விஸ்வாவின் மரணத்தை, அவர்சார்ந்த அமைப்புத் தோழர்கள் போராட்டத்தில் செய்த உயிர்த் தியாகத்தை நினைவு கூர்வ தற்கும் கூட, அவ்வமைப்பு தலைமைகளால் இயலாமல் போனது. தமிழீழ வரலாற்றில் மிகவும் துரதிஷ்டவசமானது. விஸ்வா மரணம் உண்மையில் சிறீலங்கா கடற்படையால் ஏற்பட்டதா? அல்லது குட்டி முதலாளிய இயக்க தலைமைகளின் காட்டிக் கொடுப்பால் ஏற்பட் டதா? என்பது கூட இன்று வரை தெரியாது. விஸ்வாவின் மரணத்தின் பின் அவருடன் இருந்த சில தோழர்கள் 1988-இல் விஸ்வாவின் நினைவை வெளிக் கொணர்வதற்காக, விஸ்வாவுடன் நெருங்கிப் பழ

www.tamilarangam.net



கிய தமிழ்நாட்டின் முற்போக்கு எழுத்தாளரான S.V.R. இடம் கேட்டுள்ளனர். அவரும் எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால் அது வெளிவரவில்லை.

தேசிய விடுதலைப் போராட்டத்திலும், மக்களின் சுதந்திரத்திலும் தெளிவும் உறுதியும் கொண்ட அந்தத் தோழர்கள் 14 ஆண்டுகள் பேணி வந்த நினைவுக் குறிப்பை வெளியிடுவது இன்று மிகவும் சாலப் பொருத்தமானது.

தமிழீழப் போராட்டத்தில், தொழிலாளிவர்க்க இயக்கத்தின் தொடர்ச்சியாக, ஒரு புரட்சிகர தேசியவிடுதலை இயக்கத்தை நிறுவி வளர்க்க முயன்ற தோழர் விஸ்வாவையும், அவருடன் கூடிச் செயற்பட்டு போராட்ட தயாரிப்பு பணிகளிலேயே, பயணத்தில் வீரமரணம் அடைந்த தோழர்களையும், இடதுசாரிக் கட்சிகளில் இறுதிவரை நின்று போராடி தியாகிகளான தோழர்களையும், தமிழீழ குட்டி முதலாளிய இயக்கங்களில் இணைந்து செயற்பட்டு - தமது தலைமைகளின் துரோகத்தன்மைக்கு எதிராக உறுதியுடன் போராடி, புரட்சிகர தேசிய விடுதலை இயக்கத்தை வேண்டி உள்ளியக்க - சக இயக்கபடுகொலைகளில் உயிர்நீத்த தோழர்களையம், அவர்களின் தியாகத்தையும் நினைவு கூர்வது இன்றைய வரலாற்றுச் சூழலில் அர்த்தம் நிறைந்தது.

தமிழீழ தேசிய விடுதலை என்பது மண் விடுதலை மட்டுமல்ல. மக்களின் விடுதலையையும் உள்ளடக்கியது. தமிழீழ விடுதலைப் போராட்டம் சிறீலங்கா அரசுக்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல. உலக ஏகாதிபத்திய அமைப்புக்கு எதிரான போராட்டமும் ஆகும்; தமிழீழ புதிய சனநாயக வர்க்க சக்திகள், தொழிலாளி வர்க்க அரசியல் தலைமையில் அணிதிரட்டப்படும் போது மட்டுமே இந்த இலட்சியங்களை வெல்ல முடியும். இக்கொள்கையில் இறுதிவரை உறுதியாக நின்று, தங்களின் உயிரை தேசத்துக்காக - மக்களுக்காக அர்ப்பணித்த அந்த தோழர்களின் இலட்சியங்களை உறுதியாக பற்றி நிற்பவர்களால்தான் இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் போராட முடியும். ஏகாதிபத்திய புதுக்கொலனிய கட்டத்தில் தேசிய விடுதலைப் போராட்டங்களை புதிய சனநாயக புரட்சி நோக்கி கூர்மைப்படுத்த வேண்டும்; தொழிலாளிவர்க்கம் தனது தலைமையில் முன்னெடுக்க வேண்டும்.

— மரியா

நன்றி: புதிய சகாப்தம்

www.tamilarangam.net



# விஸ்வா எனும் மானுடன்

வான்வெளியில் கொல்லப்பட்டன
அந்தப் பறவைகள்
கொலைகாரருக்கெதிராக
நட்சத்திரங்களும் மேகங்களும்
காற்றும் கதிரவனும்
சாட்சி கூறவில்லையென்றாலும்
அடிவானம் அதுபற்றிக்
கேட்க விரும்பவில்லையென்றாலும்
மலைகளும் ஆறுகளும்
அவற்றை மறந்து போய் விட்டாலும்
ஏதேனுமொரு மரம்
அந்தக் கொடுஞ்செயலை பார்த்துத்தானிருக்கும்
தன் வேர்களில் அக்கொடியோரின் பெயர்களை
எழுதி வைக்கத்தான் செய்யும்.

– ஷெர்கோ பெகாஸ் (குர்திஷ் கவிஞன்)

எட்டரையாண்டுகளுக்கு முன்பு நடந்தது அந்த முதல் சந்திப்பு. பீத்தோவனின் 6-வது சிம்பனியின் ஒலிப்படிமங்கள் சித்திரிக்கின்ற அழகு தவழ் (மலை) நாட்டுப்புறப் பகுதியொன்றிலிருந்து வெளியேறி அப்போதுதான் சென்னையில் குடியேறியிருந்தேன். அதுவரை நான் வாழ்ந்து வந்திருந்தது உண்மையிலேயே ஒரு சொர்க்க பூமிதான். தினந் தோறும் 'ஹலோ' சொல்லும் மலைகள்; எப்போதும் புன்னகைக்கும் ஓடைகள்; பளிச்சென்று பரந்து விரியும் பச்சைப் புல்வெளிகள். அறிவுத் தாகத்தைத் தணிக்கவோ அரசியல் வேட்கையைத் தீர்க்கவோ அவை போதாதென்று முடிவு செய்து சென்னைக்குக் குடிபெயர்ந்தேன். இங்கே கூவத்தையும் சேர்த்து நக்கவும் முகரவும் வேண்டியிருக்கும் என்பதை அப்போது நான் உணரவில்லை.

குழப்பம் நிறைந்தவனாக இருந்தேன். இங்கு என் இலக்கிய வளர்ச்சியை எதிர்பார்த்த நண்பர்களோ ஏமாற்றமடைந்தனர். சென்னைக்கு நான் வரவேண்டுமென்று விரும்பிய இரு அரசியல் தலைவர்களில் ஒருவர் ஏற்கனவே தலைமறைவாகியிருந்தார். மற்றொருவரின் தலை மறைந்தும் மறையாமலும் இருந்தது. அரசியல் வழிகாட்டுநர்களாக நான்

www.tamilarangam.net



கருதி வந்தவர்கள் சிறு சிறு குழுக்களாகப் பிளவுண்டு கிடந்தனர். நூற்றுக் கணக்கான அச்சடிக்கப்பட்ட பக்கங்களில் அவர்கள் நடத்திய சித்தாந்தப் போராட்டங்களின் 'தார்ப்பரியம்' புரியாதவொரு அற்பஜீவியாக நான் சுருங்கிப் போயிருந்தேன். பின்னர், கடந்த காலப் பரிச்சயத்தின் அடிப்ப டையில் ஒரு மனிதரின் தலைமையிலிருந்த குழுவுக்கு விசுவாசம் தெரி வித்தேன். அக்குழு எனக்கு ஊட்டியிருந்த 'அறுதி உண்மை'யை நான் அசைபோட்டுக் கொண்டிருந்த காலம் அது. 'அதுவல்ல', 'அதுவல்ல' என எனது உபநிடதமனம் சொல்லிக் கொண்டேயிருந்த போதிலும் அசை போடுவதை நான் நிறுத்தவில்லை.

அந்தக் காலத்தில்தான் அந்த முதல் சந்திப்பு நிகழ்ந்தது. அந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்ட முக்கிய விசயம், சில ஆண்டுக ளுக்கு முன்பே என் காதில் வந்து விழுந்திருந்த ஒன்றுதான். அப்போது நான் மலைப் பகுதியொன்றில் வாழ்ந்து வந்தேன். 'லங்கா ராணி' என்ற புதினத்தின் பிரதியுடன் அருளர் என்பவர் என்னைச் சந்தித்தார். ஈழம் பற்றிப் பேசினார். தனிநாடு பற்றிக் கூறினார். அச்சமயத்தில் நான் மார்க்சிசம் - லெனினிசம் - மாசேதுங் சிந்தனையில் திளைத்திருந்தவன். உலகத்தை கறப்பும் வெள்ளையுமாகப் பாகுபடுத்திப் பார்க்கத் தெரிந்து வைத்திருந்தவன். (உலகத்தை மூன்றாகப் பாகுபடுத்திப் பார்க்க வேண்டும் என்று சீனர்கள் கூறியபோது தான் சிறிது குழப்பமடைந்தேன்) எல்லாப் பிரச் சனைகளுக்குமான 'நிச்சயமான' பதில்கள் என்னிடமிருந்த காலம் அது.

எனவே, சீனம் ஆதரிக்காத, சண்முகதாசன் ஆதரிக்காத ஒரு விஷ யத்தை நான் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்! அதுவும் மாஸ்கோவின் லுமும்பா பல்கலைக்கழகத்தில் படித்த ஒரு நபர் கூறும்போது!! சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் மற்றொரு சதியே ஈழப்போராட்டம் என்பதை 'ஐயந்திரிபுர' அறிந்து கொண்ட நான் குறைந்தபட்ச சம்பிரதாயங்களைக் காட்டி விட்டு அருளருக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டேன்.

என்ன ஆச்சரியம்! மூன்றாண்டுகளுக்குப் பிறகு சென்னைக்கு நான் வந்து சேர்ந்த பிறகு ஈழக் கோரிக்கை என்ற 'சமூக ஏகாதிபத்திய சதிக்கு' ஆதரவு தேடி யாழ்ப்பாண மாவோயிஸ்ட் ஒருவர் வந்தபோது என்னையே நான் நம்பமுடியவில்லை. இத்தனைக்கும் நான் நம்பவே முடியாத பல விஷயங்களை நம்பிக்கையின் பேரில் நம்பப் பழக்கப்பட்டிருந்தவன் தான். உதாரணமாக, லின்பியாவோ 1928-இல் இருந்தே கோமிண்டாங் ஏஜண்ட் என்று சியாங்சிங் கூறியதையும், சியாங்சிங் 1927-லிருந்தே கோமின்டாங் ஏஜண்ட் என்று ஹீவா குவா பெங் (இவரைப் பற்றி இப்போது யாருக்காவது நினைவிருக்கிறதா?) கூறியதையும் நம்புவது எனக்கு அவ்வளவு கடினமானதாக இருந்ததில்லை.

www.tamilarangam.net



ஆயினும், இந்த மாவேோயிஸ்டை நம்பமுடியாமலிருந்ததற்கு காரணம் ஈழம் என்ற 'சமூக ஏகாதிபத்திய சதிக்கு' அவர் ஆதரவு திரட்ட வந்தார் என்பது மட்டுமல்ல. நான் சென்னைக்கு வந்ததும் எனது 'வர லாற்றுக் கடமைகளில்' ஒன்றாக 'கார்ல் மார்க்ஸ்' பெயரில் ஒரு நூலகம் அமைக்கத் துணை புரிந்திருந்தேன். பல்வேறு நிற மார்க்சியர்கள் அங்கு கூடுவது வழக்கம். எனது இல்லமும் நூலகமும் ஒரே கட்டிடத்தில் இயங்கின. நவீன ஓவியத்தோடு ஒரு சிறு பத்திரிகை வெளிவந்தால் கூட அதை தீவிரவாதிகளின் சதி என்று அரசாங்கமும், சி.ஐ.ஏ. (C.I.A.) சூழ்ச்சி என நாடாளுமன்ற மார்க்சியர்களும் கருதி வந்த ஒரு சூழ்நிலையில் அண்ணா துரை பெயரிலோ, கருணாநிதி பெயரிலோ அல்லது குறைந்த பட்சம் ஜீவானந்தம் பெயரிலோ நூலகம் திறக்காது காரல்மார்க்ஸ் பெயரில் அதைச் செய்தவுடன் அரசாங்கம் தன் உஷார் நிலையைத் தூண்டிவிட்டுக் கொண்டது. 'இது நூலகமல்ல, நக்சலைட்டுக்கள் சந்திப்புக் கூடாரம்' என்பதில் சந்தேகமே இல்லாத காவல் துறையின் மோப்பத்திற்கு எமது இல்லம்-நூலகம் இலக்காகிக் கொண்டிருந்த காலம் அது. மோதல் என்ற பெயரால் நக்சலைட்டுக்கள் நரவேட்டையாடப்பட்ட காலம்.

நூலகத்தில் சேர்ந்து படிக்க விரும்புபவர்களாக நடிப்பதில் தமது அமெச்சூர் தனத்தை வெளிப்படுத்திவிட்டுப் பின், அசடு வழிந்த உளவுத் துறையினர் நூலகத்துக்கு வருகை தந்து கொண்டிருந்த காலம்; விசாரணைக்காக நானும் இன்குலாப் போன்ற தோழர்களும் அழைத்துச் செல்லப்படுவதும் வீடுகள் திடீர் சோதனைக்குள்ளாக்கப்படுவதுமாக இருந்த நாட்கள் அவை.

அப்போதுதான் அந்த முதல் சந்திப்பு நிகழ்ந்தது. ஒருமுறை உளவுத் துறை அதிகாரியொருவர் கார்ல் மார்க்ஸ் மீதுள்ள தனது 'விசுவாசத்தை' சரியாக வெளிப்படுத்த முடியாமல் எங்களிடம் குட்டுப்பட்டு அசடு வழிந்து கொண்டு அப்போதுதான் வெளியேறிக் கொண்டிருந்தார். சில நிமிடங்கள் கழித்து குள்ளமான, ஒல்லியான ஒரு மனிதர், கலையாத தலைமுடியும் துருத்திக் கொண்டிருந்த சில பற்களுமாக கீச்சுக் குரலுடன் - உள்ளே நுழைந்தார். அவர் வந்த நேரம், அவர் பேசிய 'தமிழ்' வந்ததும் வராததுமாக அரசியல் விவாதமொன்றை அவர் துவக்கியமை... எனக்கும் நூலக நிறுவனர் தோழர் எஸ்.எஸ். கண்ணனுக்கும் அவர் மீது சந்தேகத்தை ஏற்படுத்தின. மத்திய அரசாங்க உளவாளியோ?!

அவர் பேசியது யாழ்ப்பாணத் தமிழ் என்பதை நாங்கள் உணர்ந்ததுமே மத்திய அரசாங்க உளவாளி என்ற கருதுகோள் மறைந்தொழிந்து விட்டது. முதல் சந்திப்பிலேயே எத்தனை விஷயங்களைப் பேசினார். ஈழக் கோரிக்கை முதல் நாகலாந்துப் பிரச்சினை வரை; சோவியத் கம்யூ

www.tamilarangam.net



னிசத்திலிருந்து இந்திய மார்க்சியம் வரை; செகுவரா முதல் ஜே.வி.பி. வரை. பின்னர் அடுக்கடுக்கான கேள்விகள்; எல்லாவற்றுக்கும் அப்போதே அங்கேயே விடைகள் கிடைத்துவிட வேண்டும் என்ற அவசரம், அவரது சந்தேகங்கள் அனைத்தையும் அவருக்கெதிரே அமர்ந்திருப்பவர் தீர்த்து விடுவார் என்ற எதிர்பார்ப்பு, அவ்வப்போது தெறித்து விழும் கிண்டல், குறும்புச் சிரிப்பு, தீட்சண்ணயம்மிக்க கண்கள்...

'விஸ்வா'வுடனான என் முதல் சந்திப்பு இப்படித்தான் நடந்தது. பொறியியல் பட்டம் பெற்ற, மாவோயிச பாரம்பரியமுள்ள விஸ்வானந்த தேவன் என்ற இளைஞரை இப்படித்தான் நான் தெரிந்து கொண்டேன்.

சந்திப்புகள் தொடர்ந்தன. எத்தனை கருத்து மோதல்கள், சச்சரவுகள்.

ஒரு தலைமறைவு - புரட்சி இயக்கத்தோடு எனக்கிருந்த தொடர்புகள், அவற்றின் காரணமாக எனக்கேற்பட்ட தொல்லைகள் இழப்புகள் இவற்றினூடே - இந்தியாவில் உள்ள மார்க்சிய - லெனினியக் குழுக்களை சேர்ந்தவர்களுக்கே உரிய Holier - than - them மனப்பான்மை, சட்டைப் பையில் வைத்திருக்கின்ற 'அறுதி உண்மை'களைக் கொண்டு பிறரையும் பிற இயக்கங்களையும் அளவிடும் போக்கு - இவற்றினூடே எங்கள் சந்திப்புக்கள் தொடர்ந்தன; சச்சரவுகளுடன் நட்பும் வளர்ந்தது.

இங்குள்ள மார்க்சிய - லெனினியக் குழுக்களிடையே நடக்கும் சண்டைகள், மோதல்கள், பரஸ்பர அவதூறுகள், சகோதரக் கொலைகள் ஆகியவற்றின் கதிர்வீச்சுக்கு அவர் இரையாகிவிடக் கூடாது என்பதை மட்டும் நான் அடிக்கடி நினைவூட்டி வந்தேன்.

அவரோடும் இதர ஈழப் போராட்டக் குழுவினரைச் சேர்ந்த சிலரோடும் நடாத்திய விவாதங்களுக்குப் பின், எனது ஈழப் பிரச்சனை பற்றிய மௌளஈகம் அகன்றது. இதே சமயத்தில்தான் இந்தியாவில் உள்ள தேசிய இனப் பிரச்சினை பற்றிய ஆழமான விவாதங்களிலும் ஆய்வுகளிலும் நானும் பிற தோழர்களும் ஈடுபட்டிருந்தோம். இந்தியப் புரட்சியாளர்கள் தமது செயல்திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கு முதன்மை இடம் தரவேண்டும் என்ற கருத்தும், ஈழக் கோரிக்கை நியாயமானது என்ற கருத்தும் என்போன்றோரிடம் ஒரே சமயத்தில் வலுப்படத் தொடங்கின.

அவர் பலமுறை தமிழகம் வருவதும், தாயகம் திரும்புவதுமாக இருந்தார். அதற்குள் இங்குள்ள எல்லா மார்க்சிய - லெனினிய குழுக்க

www.tamilarangam.net



ளுடனும் பேசித் தீர்த்திருந்தார். இதற்கிடையே எத்தனை மாற்றங்கள். இவை ரெஜிஸ்தெப்ரே ஒரு சமயத்தில் எழுதியதை நினைவூட்டுகின்றன: ''நமது நிகழ்காலத்தோடு நாம் ஒருபோதும் முழுமையாக உடன் செல்வ தில்லை. ஏனெனில் வரலாறு மாறுவேடத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது. முந்தைய காட்சியில் தான் அணிந்திருந்த முகமூடி யுடனேயே மேடையில் அது தோன்றுகிறது. நாமோ நாடகத்தின் பொருளை அறிந்து கொள்ளாதவர்களாகி விடுகிறோம்.''

*1983*-இல் இலங்கையில் நடந்த இனப்படுகொலைகள், அதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் தமிழகம் வந்தமை, போராளி குழுக்கள் தமிழகத்தில் இயங்கத் தொடங்கியமை, தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சி, மத்திய அரசின் தலையீடு, ஆயுதப் பயிற்சிகள், பயிற்சி முகாம்கள் - இப்படி அடுத்தடுத்துப் பல நிகழ்ச்சிகள் நமது ஊகங்களை, கற்பனைகளை, பழகிப் போன கருத்தாக்கக் கட்டுக் கோப்புக்களைத் தாண்டி நிகழ்ந்து விட்டன.

இந்தியத் தலையீடு பற்றிய சில உண்மைகளை தீர்க்கதரிசனத்தோடு மார்க்சிய - லெனினிய குழுக்கள் கூறிவந்த போதும் அவற்றில் பெரும் பாலனவை ஈழப் போராட்டத்தின் வரலாற்றுத் தேவை பற்றியும், தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் வர்க்கப் போராட்டத்தின் ஒரு வடிவம் என்பது பற்றியும் புரிந்து கொள்ளத் தவறின. ''தமிழ்ப் பாட்டா ளிகளும் சிங்களப் பாட்டாளிகளும் இணைந்து போராட வேண்டும்'' என்ற வாய்ப்பாடு ஈழப் புரட்சியாளர்கள் அனைவருக்குமே எரிச்சல் ஊட்டியிருக்கும். இதில் ஆச்சரியம் என்னவெனில் இந்த வாய்ப்பாட் டைத்தான் இந்தியாவிலும்-இலங்கையிலுமுள்ள நாடாளுமன்ற மார்க்சி யர்கள் மட்டுமல்லாது, இலங்கையில் உள்ள ஜே.வி.பி. உம் கூறிவருகின் றது என்பதை இந்த மார்க்சிய - லெனினியக் குழுக்கள் உணர்ந்து கொள்ள வில்லை.

பிளவுகளாலும், குழுச் சண்டைகளாலும், அர்த்தமற்ற வாக்குவாதங் களாலும், அரசு ஒடுக்குமுறையாலும் பலகீனப்பட்டிருந்த இக்குழுக்க ளிடம் ஈழப் போராளிகளுக்கு செயலூக்கம் மிக்க உதவிகளை வழங் கவோ அல்லது கோட்பாட்டுரீதியான வழிகாட்டுதல்களுக்கு உதவவோ ஆற்றல் இருக்கவில்லை. இதற்கிடையே ஈழத்தின் ஆயுதப் போராட்டம் குறிப்பாக நகர்ப்புற கெரில்லாப் போராட்டம் மிக உயர்ந்த அளவிற்கு வளர்ந்து விட்டது.

இந்த குழுச் சண்டைகளின் போது பழிகளையும், பாவங்களையும் சுமப்பதற்கு ஒரு பலிக்கடா எப்போதும் தேவைப்பட்டது. தங்கள்

www.tamilarangam.net



பின்னடைவுகளுக்கும், தமக்குள் ஏற்படும் பிளவுகளுக்கும் காரணமாகக் காட்ட ஒரு எதிரி எப்போதும் தேவைப்பட்டான். அந்த 'எதிரி', அந்த 'ஏகாதிபத்திய ஏஜண்ட்', அந்த 'குட்டிப்பூர்சுவா குழப்பவாதி' பாத்தி ரத்தை ஏற்க வேண்டிய முறை எனக்கு வந்து விட்டதைக் கண்டு நான் பெரிதும் அதிர்ச்சியடைந்தேன். பொய்மையையே தம் ஆன்மாவாகக் கொண்ட சில 'மார்க்சிய - லெனினியர்கள்' திட்டமிட்டு நடாத்திய அவ தூறு இயக்கத்தால் நான் துவண்டு போயிருந்தேன்.

அந்தச் சமயத்திலும் விஸ்வா என்னிடம் வந்து போவார். என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள், அவதூறுகள் பற்றியும், குழுச் சண்டைகள் பற்றியும் கூறுவார். சில சமயங்களில் ஆத்திரமடைவேன். ''ஈழத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை மேலும் உயர்ந் ததொரு கட்டத்திற்கு எடுத்துச் சென்று கொண்டிருக்கையில் நீங்கள் இங்கே வம்பளந்து கொண்டிருக்கின்றீர்கள்'' என்று ஒரு முறை கத்தினேன்.

ஆனால் அவர் வம்பளப்பவரல்லர்; வெட்டிப் பேச்சாளர் அல்லர் என்பதை உணர்ந்து கொள்ள நீண்ட காலம் பிடிக்கவில்லை. விரைவில் ஈழம் சென்று திரும்பிய அவர் ஒவ்வொரு சொல்லையும் மேலதிக கவ னத்தோடும் பொறுப்போடும் பேசக் கூடியவரானார். புலிகளுடன் அவ ருக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தன. சரியான அரசியல் திசைவழி அவர்களிடம் இல்லை என்று கருதினார். ஆயினும் பிற போராளிக் குழுக் களின் விமர்சனம் போன்றதல்ல அவரது விமர்சனம். பொறுப்போடும் நிதானத்தோடும் பேசினார். மரபான மார்க்சிய - மாவோயிசப் பார்வையின் தாக்கம் அவரது சிந்தனையைத் தொடர்ந்து பாதிக்கவே செய்தது. புலிகளுடன் எனக்கு அரசியல்ரீதியான அல்லது வேறு வகை யான தொடர்புகள் இருக்கவில்லை என்ற போதிலும் என் மனத்தின் ஓரத்தில் அவர்களில் மேல் எனக்கு அனுதாபமும் மரியாதையும் இருந் ததை அவர் புரிந்து கொள்ளாமலில்லை. ஆயுதப் போராட்டத்தை தமது இயக்க ஆதரவாளர்களும் கையிலெடுக்க வேண்டியது பற்றிப் பேசினார். நிக்கராகுவா போன்று ஒரு முன்னணி பற்றி சிந்திக்குமாறு கேட்டுக் கொண்டேன்.

'பெரியண்ண'னிடமிருந்து உதவிகள் பெறக்கூடிய வாய்ப்பை அவரது தோழர்கள் பரிசீலிக்குமாறு கூறிய போது அதைதான் நிராகரித்ததாகக் கூறினார். புதிய எஜமானனுக்குத் தம் நாட்டினர் அடிமையாகிவிடுவதை எதிர்த்தார்.

www.tamilarangam.net



N.L.F.T. என்ற அமைப்பை உருவாக்குவதில் அவர் பெரும் பங்காற்றியதை நான் அறிந்து கொண்டேன். அவரது சிந்தனையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. சீனப் பாதையையும், சீன அனுபவத்தையும் எங்கெங்கும் பின்பற்றக்கூடிய 'முழுமுற்றுக்கள்' என்பதை அவர் ஏற்கவில்லை. வியத்நாம், கியூபா, நிக்கராகுவா, பாலஸ்தீனம், அயர்லாந்து, எல்சல்வடோர், தென்னாப்பிரிக்கா, தெலுங்கானா போன்ற எல்லாப் போராட்டங்களிலிருந்தும் ஈழப் போராளிகள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவர் கருத்து. சீனப் பாதையை விக்கிரமாக்கி வழிபட்டுக் கொண்டிருந்த ஒரு மா.லெ.குழு, 'வருடத்திற்கு ஒரு பிளவு' என்ற கணக்கில் செயல்பட்டு வந்த இந்தக் குழு, விஸ்வாவை விட்டு விலகியவர்களை மட்டும் அங்கீகாரம் செய்தது.

கடைசிச்சந்திப்புக்கள் சிலவற்றின் போது விஸ்வா சற்று சோர்வோடு காணப்பட்டார். தனக்கு நீண்ட காலம் பரிச்சயப்பட்டிருந்த அக்குழுவின் அங்கீகாரம் கிடைக்காததால் ஏற்பட்ட சோர்வு அது. எனக்கு ஆத்திரம் ஏற்பட்டது. ''யார் எவரை அங்கீகரிப்பது? உங்களை அங்கீகரிக்க வேண்டியது ஈழ மக்கள்; உங்கள் கொள்கை, உங்கள் மூலோபாயத்தை, தந்திரோபாயத்தை சரி - தப்பு என நிரூபிக்கப் போவது உங்கள் நடைமுறை. இந்த நாட்டில் ஏராளமான கம்யூனிஸ்டுகள் மாஸ்கோவுக்கும் பீக்கிங்குக்கும் காவடி எடுத்துச் சென்று திரும்பி வந்து களைத்துப் போய்விட்டனர். நீங்கள் ஏன் யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்கு காவடி தூக்கி வரவேண்டும்'' என்று கேட்டேன்.

ஆனால் அவரது வருத்தத்தில், மனவேதனையில், ஆதங்கத்தில் ஓர் உண்மை இருக்கவே செய்தது. அது, இன்றைய உலகச் சூழலில் புவிசார் அரசியல் நிலைமைகளில் ஈழமக்களின் இறுதி வெற்றி என்பது நீண்டகால நோக்கில் இந்திய சமுதாயத்தில் ஏற்படும் புரட்சிகர மாற்றம் என்பதுடன் பிணைந்துள்ளது என்ற உண்மை. அவரது ஆதங்கத்தையும் ஏமாற்றத்தையும் போக்க என்னால் என்ன செய்ய முடியும்? எல்லாக் குழுக்களிடமிருந்தும் விலகி ஒதுங்கி நின்ற தனி மனிதனாகவே இருந்தேன் நான்.

கடைசிச் சந்திப்புக்கள் இரண்டின் போதும் அவரிடம் உற்சாகம் கூடியிருந்ததைக் கண்டேன். தானும் தனது தோழர்களும் PLFT என்ற புதிய அமைப்பை உருவாக்கியுள்ளதாகக் கூறினார். இலங்கையிலுள்ள போராட்டக் குழுக்களெல்லாம் தங்களுக்கு பெயர் வைத்துக் கொள்வதில் ஆங்கில எழுத்துக்கள் 26-யும் பயன்படுத்தி விட்டனவே, இனி புதிய குழுக்களுக்கு வேண்டிய எழுத்துக்களுக்கு என்ன செய்வீர்கள் என்று அவரைக் கேலி செய்தேன். மெல்லிய புன்னகையைப் பதிலாகத் தந்தார்.

www.tamilarangam.net



மூன்றாம் உலக நாடுகளில் நடக்கும் விடுதலைப் போராட்டங்கள் பற்றிய சில புத்தகங்களைக் காட்டினார். செகுவரா, கியாப் ஃபாரு பான்டோ, மார்ட்டி, சாண்டினோ காப்ரால் போன்றவர்கள் இல்லாத மார்க்சியம் ஏழ்மைப்பட்டுப் போகும் என்றார். கியாப் எழுதிய நூலொன் றினை மொழியாக்கம் செய்து தருமாறு கேட்டார். இரண்டு அத்தியாயங் களை நானும் பிற அத்தியாயங்களை சிங்கராயர் என்ற இளம் நண்பரும் மொழியாக்கம் செய்தோம். எங்கள் பெயர்களைக் குறிப்பிடக்கூடாது என்பதுதான் முதலில் எங்கள் விருப்பமாக இருந்தது. ஆனால் தியன் பியன் ஃபூவில் பல்லாயிரம் பிரஞ்சுத் துருப்புக்களைத் தோற்கடித்த அந்த புதர்த் தளபதியின் (Bush general இப்படித்தான் ஏகாதிபத்தியவாதிகள் அவரை அழைத்தனர்) நூலை மொழிபெயர்த்தமை எமக்குக் கிடைத்த கௌரவமாக கருதியதால் எங்கள் பெயர்களைக் குறிப்பிடுமாறு பின்னர் கேட்டுக் கொண்டேன்.

இந்த மொழியாக்க நூல் வெளிவந்ததும் தன் நண்பர்கள் மூலம் சில பிரதிகளைக் கொடுத்தனுப்பியிருந்தார் விஸ்வா. அவரது கையெழுத் துடன் எனக்கொரு பிரதி வேண்டுமென்றேன். ஈழம் சென்றிருக்கின்றார், வந்ததும் வாங்கித் தருகின்றோம் என்றனர்.

புலிகளின் போராட்டமும், டெல்லி சாணக்கியர்களின் ராஜதந்திர சூழ்ச்சிகளும், ஜே.ஆரின் ஒடுக்குமுறைகளும் மிகவும் வளர்ச்சிய டைந்து, குழப்பமான சிக்கலான சூழல் நிலவுகையில், ஈழத்தில் நடக்கும் பிற விஷயங்கள் பற்றி யாருமே அதிக கவனம் செலுத்த விரும்பாதிருந்த சமயத்தில் அந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்தது.

ஒருநாள் மதியம், எனக்குத் தெரிந்த ஈழ நண்பர் ஒருவர், என் வீட்டிற்கு வந்தார். படகில் வந்து கொண்டிருந்த விஸ்வாவையும், வேறு சிலரையும் இலங்கைக் கப்பற் படையினர் சுட்டுக் கொன்றுவிட்டதாகக் கூறினார். இச் செய்தியை உறுதி செய்து கொள்வதற்காகதான் விஸ்வாவின் (சென்னை) வீட்டிற்குச் சென்றதாகவும், அச்செய்தி பற்றி ஏதும் தெரியா திருந்த அவரது இளம் மனைவி கைக்குழந்தையோடு தன்னை வரவேற் றதாகவும், ''விஸ்வா இயக்க வேலைகளுக்காக யாழ்ப்பாணத்தில் நிற்கிறார்'' என்று கூறியதாகவும் இச்சோகச் செய்தியை எப்படி அப்பெண்ணிடம் சொல்வது என்பது புரியாமல் பின் எப்படியோ சமா ளித்து விட்டுத் திரும்பி வந்து விட்டதாகவும் கூறினார்.

விஸ்வா ''இயக்க வேலைகளுக்காக யாழ்ப்பாணத்தில் நிற்பதாக'' அவர் மனைவி பல மாதங்கள் தொடர்ந்து நம்பிக் கொண்டிருந்ததாக பின்னர் வேறு சில நண்பர்கள் கூறினர்.

www.tamilarangam.net



எத்தகைய குரூரமான மரணம் அது. சாட்சிகள் இல்லாத மரணம்; பாடப் பெறாத மரணம், அங்கீகரிக்கப்படாத, பகிரங்கப்படுத்தப்படாத, பரிவு செய்யப்படாத மரணம்; அஞ்சலி செலுத்தப்படாத மரணம்; நீத்தார் நினைவு நாள் அஞ்சலட்டையில் புகைப்படம் பிரசுரிக்கும் வாய்ப்புக்கூட இல்லாத மரணம்.

எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்திருக்கின்றன. ஆனால் அவரை உண்மையான ஈழ தேசபக்தனாக புரட்சியாளனாகவே நான் கருதினேன். மார்க்சிய அணிகலன்களைப் பூட்டிக் கொண்டு தென்னாசியப் போலீசுகாரனின் கைத்தடிகளாக மாறிவிட்ட பல 'போராளி'க் குழுக்களைச் சேர்ந்த பல இளைஞர்கள் கூட, சிங்கள இன வெறியின் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் சித்திரவதைகளுக்கும் பலியாகிய போது இரத்த சாட்சிகளாக மதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகக் குறைந்த பட்சம் தன்னால் தனியாகவேனும் போராடியிருக்கக் கூடிய ஒரு உண்மையான தேசபக்தனின் மரணத்துக்கான ஒரே சாட்சியாக அவரை விழுங்கிய நீலக் கடலின் உப்புத் தண்ணீரே எஞ்சியுள்ளது.

நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களை ''வரலாற்று நிலத்தை உழுபவர்கள், அந்த நிலத்திற்கு உரமாக அமைவார்கள்'' என்று இரண்டு வகைகளாகப் பாகுபடுத்துகிறார் கிராம்ஸ்சி.

உழுபவனைப் பார்க்க, அங்கீகரிக்க புகைப்படம் பிடிக்க வர்ணிக்க நம்மால் முடிகிறது. மண்ணோடு மண்ணாக மக்கி உரமாகி விட்டவர்களை...?

ஆனால் உரமில்லாமல் வரலாற்றுக்கு வளம் கூட்டுவது எப்படி?

''உரத்திற்கு, 'நெஞ்சுரத்திற்கு'த் தலை வணங்குவோம்.''

— எஸ்.வி. ராஜதுரை

www.tamilarangam.net



# புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலம்

சிறீலங்கா அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நிரந்தர யுத்த நிறுத்தம் பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. நோர்வே அரசின் இரண்டாவது முயற்சியின் முதல் நடவடிக்கை வெற்றி. ''தொடர்பாளர்'' என்ற நிலையில் இருந்து ''அதிகாரபூர்வ தொடர்பாளர் தூது'' என இரண்டு தரப்பும் அங்கீகரித்துள்ளது. பேச்சுவார்த்தைக்கான அடித்தளம் இடப்பட்டிருக்கிறது. ஒப்பந்தத்தில், வவுனியாவில் வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், வன்னியில் இருந்து புலிகள் தலைவர் பிரபாகரனும் கைஒப்பம் இட்டுள்ளனர். ஒப்பந்தம் 22.02.2002-இல் நோர்வேயின் ஒஸ்லோவில் வெளியிடப்பட்டது. மூன்று பிரதான பகுதிகளையும், இரண்டு துணை அம்சங்களையும் உள்ளடக்கி 10 பக்கம் கொண்டது இவ்ஒப்பந்தம்.

இருதரப்பின் தரைப் படைகளின் முன்னேறுதல் இராணுவ நடவடிக்கை நிறுத்தம். படைகளின் முன்னரங்க நிலை இடைவெளித் தூரம். படுகொலை, தற்கொலை, கடத்தல், இராணுவ மற்றும் சிவில் சொத்துக்கள் மீதான தாக்குதல் நிறுத்தம். இரு தரப்பு கட்டுப்பாட்டுப் பகுதியிலும் ஊடுருவியுள்ள தாக்குதல் குழுக்களின், நபர்களின் நடவடிக்கை நிறுத்தம். ஆயுதம் தாங்காத புலிப் போராளிகள், அரசு கட்டுப்பாட்டுப் பகுதிக்கு (வடகிழக்கில்) அரசியல் வேலைக்கு சென்று வருவது பற்றிய கால அளவு மற்றும் போராளிகள் எண்ணிக்கை. ஆயுதங்கள் இன்றி இருதரப்பு படையினரும் தமது உறவினர்களை சந்திக்கச் சென்று வருவது, A9 கண்டி-யாழ் தேசிய நெடுஞ்சாலைத் திறப்பு, புலி எதிர்ப்புக் கொண்ட ஆயுதம் தரித்த இயக்கங்களிடம் ஆயுதக் களைவு, இவர்கள் அரச-இராணுவத்தில் சேர்ந்தாலும், வடக்கு - கிழக்குக்கு வெளியே இருக்க வேண்டும். யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என ஆறு மாவட்டங்களிலும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு இயங்குவது இக்குழுவின் தலைமைப் பொறுப்பு நோர்வே. இக்குழுவில் டென்மார்க், பின்லாந்து, சுவீடன் நாட்டவர்கள் பங்கு வகிப்பார்கள். ஒவ்வொரு

www.tamilarangam.net



மாவட்ட கண்காணிப்புக் குழுவிலும் அரசு தரப்பு இருவர், புலிதரப்பு இருவர், வெளிநாட்டவர் ஒருவர் என 5 பேர் இருப்பார்கள். அரசின் விமானப்படை, கடற்படை முழுநாட்டின் இறையாண்மை, ஒருமைப் பாட்டை பாதுகாக்க, பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும்.

இவ்வொப்பந்தத்தை தமிழ்த் தரப்பு கட்சிகளும், மற்றய சில நாடு களும் வரவேற்றுள்ளன. சிறீலங்காவின் அரசு அமைப்பில், சர்வ அதி காரங்களும் கொண்ட சனாதிபதி சந்திரிகா, இவ்வொப்பந்தம் அரசியல் சாசன முறைப்படி சனநாயக அடிப்படையில், அமைச்சரவை ஒப்புத லுடன் நிறைவேற்றப்படவில்லை என்றும், தன்னிடம் ஒப்புதல் பெற வில்லை எனவும் 'ஒப்பந்த மை' காயும்முன் அறிக்கை வெளியிட் டுள்ளார். J.V.P. உட்பட, சிங்கள இனவாதக் கட்சிகளும் இவ்வொப்பந் தத்தை எதிர்த்துள்ளன. நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டுள்ள தரப்புக்களால் மீறப்படுவது ஒருவகை. ஒப்பந்தத்தில் சம்பந்தப்படாத தரப்புக்களால் ஒப்பந்தம் மீறப்படுவது என்பது இன்னோர் வகை. இதனை எதிர் காலம் தீர்மானிக்கும்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம். விடுதலை யுத்தம், இதுவரை பல யுத்த நிறுத்தங்களை, பேச்சு வார்த்தைகளை ஒப்பந்தங்களை கண்டிருக்கிறது. தமிழீழ மக்களின் அடிப்படையான தேசிய அபிலாசைகளை, உரிமைகளை நசுக்கும் நோக்கில், வர லாற்றில். யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை, ஒப்பந்தங்கள் நடந்திருக்கி றது. தமிழீழ மக்களின் சமத்துவமான தேசிய அரசியல் அதிகாரத் துக்கும், சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் தடையாக, பேச்சு வார்த்தைகள் - ஒப்பந்தங்கள் இருந்த ஒவ்வொரு நிலைமையிலும், தேசிய விடுதலைப் போராட்டம் புதிய புதிய பரிமாணங்களுடன் வளர்ந்திருக்கிறது. தடைகளை உடைத்துள்ளது.

1985 வரை சிறீலங்கா அரசும், ஆளும் வர்க்க சிங்கள இனவாத கட்சிகளுக்கும் - தமிழ்த் தரகு தலைமைகளுக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தை ஒப்பந்தம் முதல், 1987-இல் இந்திய அரசும் - சிறீ லங்கா அரசும் செய்து கொண்ட ஒப்பந்தம், யுத்த நிறுத்தம், ஆயுத ஒப்ப டைப்பு, மாகாண சபை எல்லாம் என்னவானது என்பது உலக மக்கள் அறிவார்கள்.

1994-இல் சந்திரிகா தலைமையிலான SLFP கட்சி. ஆட்சியை கைப்பற்றவும், கைப்பற்றிய பின்பும் ''அரசியல் தீர்வு, அமைதி,

www.tamilarangam.net



சமாதானம்'' என்ற கோசங்களுடன் 95இல் யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை, மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார தடைநீக்கம் என எல்லாம் நடந்தது. ஆனால் இறுதியில், ஆக்கிரமிப்பு யுத்தத்தை அரசு நடத்தியது. சிறீலங்காவின் ஆளும் வர்க்கம், ஆட்சியை பிடிக்கவும், உலக நாடுகளிடமும், உலக நிதி நிறுவனங்களிடம் கடன் வாங்க கையாளும் ஒரு இராஜ தந்திரமே ''பேச்சு வார்த்தை அரசியல் தீர்வு, யுத்த நிறுத்தம்'' என்பன. சந்திரிகா ஆட்சியில், நோர்வேயின் முன்மு யற்சியில் தொடங்கப்பட்ட முதல் சுற்று சமரச முயற்சி தோற்றுப் போனது, இதையும் உலகம் அறியும்.

இப்போது மீண்டும், ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ள U.N.P. கட்சியின் பிரதமர் ரணில் என்ன சொல்கிறார் ''முன்னேப்போதையும் விட சிறீலங்கா அரசு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியும், உதவி வழங்கும் நாடுகள், நிறுவனங்களின் நிர்ப்பந்தமும், இராணுவ ரீதியாக புலிகளை தோற்கடிக்க முடியாது என்ற அனுபவமும் தான் பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் அரசியல் தீர்வு என்ற பாதையை நோக்கி தள்ளியுள்ளது.'' ஆனால் உலக (கடன்) உதவிகளைப் பெற்றுக் கொண்டதும், ஆட்சியை தக்கவைப்பதற்காக, எதிர்க்கட்சிகளை சமர சப்படுத்த, J.R. முதல் சந்திரிகா வரை கையாண்ட இராணுவத் தீர்வை, ஆக்கிரமிப்பு யுத்தத்தை ரணிலும் நடத்தமாட்டாரா என்பது கேள்விக் குறி? 1982-இல் பிரேமதாசாவின் யாழ் விஜயத்துக்கு பின், ரணிலின் இன்றைய யாழ் விஜயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

புலிகள். ஓயாத அலை வெற்றியுடன் - ஆனையிறவு முகாம் கைப்பற்றலுடன் தங்களின் இராணுவத்திறனை அதிகரித்தனர். கட்டுப் பாட்டு பகுதியை விரிவுபடுத்தினர். பெரும் ஊக்கம் பெற்றனர், கொண்டாடினர். ஆனால் புலிகளின் யாழ் மீதான முன்னேறுதலை முக்கியமாக இந்தியரசும், சில உலக நாட்டு அரசுகளும் கடும் எச்சரிக் கையுடன் தடுத்து நிறுத்தியதை பிரபாகரன் வெளிப்படையாக தெரி வித்தார். தெற்காசியாவின் ஆதிக்க அரசான இந்தியாவும், உலக ஏகா திபத்திய அரசுகளும், ஒரு எல்லைக்கு அப்பால் தேசிய விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியை - போராட்ட வெற்றியை அனுமதிக்காது என்பதை புலிகள் நடைமுறையில் கண்டனர். உலக அரசுகளுக்கு இடையிலான முரண்பாட்டை பயன்படுத்தி, தேசிய விடுதலையை வெல்ல முடியும் என்ற மூலோபாயம் கொண்ட இயக்கங்கள், நடைமு றையில்தான் இதைக் கற்றுக் கொள்ள முடியும்.

தமிழீழப் பகுதியில் ''ஓயாத அலை'' இராணுவ நடவடிக்கை வெற்றி, சிறீலங்காவில் 2001 யூலை ''விமானதள தாக்குதல்'' வெற்றி

www.tamilarangam.net



என இராணுவ ரீதியாக புலிகளின் கை ஓங்கி இருந்தபோதும், தமிழீழத் தனியரசு நிறுவப்படுவதற்கான இறுதிக் கட்டத்தில், நுழைவாயிலில் நிற்பதாக முழங்கினர். ஆனால் 2001 மார்கழி பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக புலிகளின் வியூகம் மாறியது ஏன்? சிறீலங்கா அரசை அம்பலப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தமிழீழ மக்கள் கூட சிறீலங்காத் தேர்தலில் வாக்களிக்க சனநாயக உரிமை கோரியதன் மர்மம் என்ன? ''பொருளாதார தடை'' விதித்து நாடுகளை - தேசங்களை அச்சுறுத்தி அடிபணிய வைக்கிறது, ஏகாதிபத்திய நாடுகள், உலக நிறுவனங்கள். பொருளாதாரத் தடையை வைத்தே விடுதலைப் போராட்டங்களை நசுக்க முற்படும் உள்நாட்டு சிறீலங்கா அரசின் சூழ்ச்சியை முறியடிக்கக் கூடியளவுக்கு, புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் கூட உறுதியான தேசியப் பொருளாதாரத்தை கட்டியமைக்கவில்லை; மக்களை தயார் படுத்தவில்லை. இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிக மோசமான நெருக்கடியை எதிர் கொண்டுள்ள சிறீலங்கா அரசை விட, புலிகள் முந்திக் கொண்டு தன்னிச்சையாக மார்கழி 24-இல் ''யுத்த நிறுத்தத்தை'' அறிவித்தனர். ஆனால் அதன் பின்னர்தான் சிறீலங்கா அரசு அதுவும் ''மோதல் தவிர்ப்பு'' என அறிவித்தது. (இராணுவ ரீதியில் யுத்த நிறுத்தம், மோதல் தவிர்ப்பு இவற்றுக்கு இடையில் ஆழமான வேறுபாடு உண்டு.)

செப்.11, WTC, பென்டகன் மீதான தாக்குதலுக்கு பின் ''பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம்'' என்ற பெயரில் உலகளவில் அமெரிக்கா தலைமையில் ஆன கூட்டணி அரசுகள், ஆப்கான் மீது நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தமும், அய்ப்பசி (Oct) 1-இல் காசுமீர் சட்டமன்றம் மீதான தாக்குதல் முயற்சி, மார்கழி (Dec) 13-இல் இந்திய பாராளுமன்ற தாக்குதல் முயற்சிக்கு பின் இந்தியரசு, தெற்காசியாவில் பாகிஸ்தான் மீதும், ஒரே நேரத்தில் காஷ்மீர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதும் குறிவைத்து நடத்திவரும் ''இராஜ தந்திரப் போர்'' என்பன. புலிகளின் சர்வதேச அணுகுமுறையில் பெரும் நெருக்கடிக்கு தள்ளியுள்ளது. இந்தியரசுடன் ஆன உறவை பலப்படுத்துவதில், புலிகள் எந்தளவுக்கு கீழ் இறங்கினார்கள் என்பது சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இந்தியரசின் CBI இயக்குனர் சர்மா, சர்வதேச பொலீசு கூட்டத்தில், பிரபாகரன், பொட்டு அம்மன், அகிலா என மூன்று பேரையும் ஒப்படைக்கக் கோரியது. அதுவும் கொழும்பில் நடந்த கூட்டத்தில் 25 நாடுகளிடம் இவர்களை நாடு கடத்தும் அறிக்கையும் அனுப்பியது. மறுபுறம் MOU வையும் ஆதரிக்கின்றது இந்தியா.

www.tamilarangam.net



இந்தியரசால் தேடப்படும் 20 பேர் பாகிஸ்தானில் உள்ளனர். அவர்களை பாகிஸ்தான், இந்தியரசிடம் ஒப்படைக்க வேண்டும். அதுவரை எல்லையில் இருந்து படைகள் பின்வாங்கப்படமாட்டாது என அச்சுறுத்துகிறது. நேபாளத்தில் நடந்த ''சார்க்'' மாநாட்டில் கூட சூழ்ச்சியான இராஜதந்திரம் வெளிப்பட்டது. அரசுகளுக்கு இடையிலான ''தேடப்படுபவர்களை ஒப்படைக்கும் ஒப்பந்தம்'' நடைமுறைக்கு வரத் தொடங்கியுள்ளது. புலிகளின் சர்வதேச பிரச்சார ஊடகமான IBC தமிழீழ விடுதலைக்காக போராடும் புலிகளை போராளிகள், மாவீரர்கள் என்கிறது. ஆனால் காஷ்மீரிலும், பிலிப்பைன்சிலும் தேசிய விடுதலைக்காகப் போராடும் போராளிகளை, நேபாளத்தில் போராடும் கொம்யூனிஸ்டுக்களை அமெரிக்கா மற்றும் உலக அரசுகள் எவ்வாறு ''பயங்கரவாதிகள், தீவிரவாதிகள்'' எனப் பெயர்சூட்டுகிறதோ அதே பாணியில் IBCயும் அவர்களை அறிவிப்பதை கேட்கக் கூடியதாக உள்ளது.

உண்மையில் இந்தியரசு, பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை மட்டும் அழிக்க முனையவில்லை. இந்தியாவிலுள்ள தேசிய இனங்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டங்களையும், வர்க்க விடுதலைப் போராட்டங்களையும் ஒரே நேரத்தில் நசுக்க முயல்கிறது. தெற்காசியாவிலுள்ள ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டங்களை நசுக்க, அந்நாட்டு அரசுகளுக்கு உதவுகிறது. நேபாளம் மிகச் சிறந்த உதாரணம், இதே இந்தியரசு 1970களில் பாகிஸ்தானுக்கு எதிரான வங்காள மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்தி, எல்லை தாண்டிய அரசு பயங்கரவாதத்தில் ஈடுபட்டது. 1980களில் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்தி, கடல் கடந்த அரசு பயங்கரவாதத்தில் ஈடுபட்டது வரலாற்றுப் பதிவில் உள்ளது. எது விடுதலைப் போராட்டம்? எது பயங்கரவாதப் போராட்டம்? யாரின் பார்வையில் இருந்து இதற்கு வரைவிலக்கணம் செய்வது? என்பது இன்று உலகில் நடந்து கொண்டிருக்கும் தர்க்கம். சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ள முன்னாள் யூகோஸ்லாவிய அதிபர் மிலோசவிக்கின் நீதிமன்ற வாதங்கள், சமர்பித்த ஒளிநாடாக்கள், அமெரிக்காவும், NATO படைகளும் செய்த உலக பயங்கரவாத தாக்குதல்களை ஆதாரத்துடன் வெளிப்படுத்தியுள்ளது.

உலகில் சுரண்டுபவர்களும் ஒடுக்குகின்ற அரசுகளும், சுரண்டப்படுபவர்களும் ஒடுக்கப்படுகின்றவர்களும் முன் வைக்கின்ற தர்க்கம். வரைவிலக்கணம், நியாயம் என்றும் ஒன்றாக இருக்க முடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏகாதிபத்திய அரசான அமெரிக்கா முதல் புதுக் கொலனிய நாடான சிறீலங்கா அரசு வரை, எல்லா அரசுகளும் தங்களுக்கு எதிரான சுரண்டப்படுகின்ற மக்களின், ஒடுக்கப்படுகின்ற தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை, போராடும் விடுதலை இயக்கங்களை, ''தீவிரவாதம்-பயங்கரவாதம்'' என்கின்றன. ஒரு கட்டத்துக்கு அப்பால் இயக்கங்களை தடை செய்கின்றன. ஆனால் ஒரு மூன்றாவது நாடு தனது பிராந்திய, உலக ஆதிக்க நலனில் இருந்து, இன்னோர் நாட்டு இயக்கத்தை, போராட்டத்தை தீவிரவாதம், பயங்கரவாதம் என்று பட்டியல் இடுகிறது. தடை விதிக்கிறது. இதுதான் புலிகள் இயக்கத்துக்கும் நடந்திருக்கிறது. புலிகள், உலக எதிரிகளின் சூழ்ச்சியை வெல்ல உள்நாட்டு மக்களையும், உலக மக்களையும் - மக்கள் இயக்கங்களையும் நண்பர்களாக கருத வேண்டும். அதற்கு பதிலாக எதிரிகளின் காலடிகளில் வீழ்வது. எதிரிகளை நண்பர்களாக்க முயல்வது. தேசிய விடுதலைக்கு துரோகம் இழைப்பதில் கொண்டு சென்று விடும் என்பதைப் புரிந்து கொள்ளும் காலம் வந்துவிட்டது. இன்றைய உலக நிலைமையில், ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலை இயக்கங்கள், தங்கள் நாட்டுக்கு வெளியே உலக நாடுகளில் தங்களின் செயற்பாடுகளை, தெளிவான சர்வதேச கொள்கை வழிகாட்டலில் அமைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் உலக மக்களின் ஆதரவை வெல்ல முடியாது. உலக எதிரிகளை தோற்கடிக்க முடியாது.

'வன்முறை இல்லாத மக்கள் இயக்கங்கள்' என்ற ஒரு கோட்பாட்டை ஏகாதிபத்தியங்கள் மற்றும் உலக நிதி நிறுவனங்கள் NGOக்கள் வழியாக முன் தள்ளி வருகின்றன. அதேபோன்று சுரண்டலை, சந்தைப் பொருளாதாரத்தை, மூலதனத்தை அழிக்காது. ஆனால் முதலாளித்துவ முறைக்கு உட்பட்டு, தனிமனித மற்றும் சமூக வளர்ச்சி அமைப்புக்களை, நிவாரண இயக்கங்களை, உலகமயமாக்கலுக்கு இசைவான முறையில், புதுக் கொலனிய நாடுகளில், ஏகாதிபத்தியங்கள் NGOக்கள் வழியாக பலப்படுத்தியுள்ளன. ஆளும் வர்க்கத்தின் சுரண்டலை, சந்தைப் பொருளாதாரத்தை, அரசின் வன்முறைக் கட்டமைப்பை எந்த விதத்திலும் பாதிக்காத, எதிர்க்காத, அழிக்காத அரசியல் இயக்கங்களை மட்டுமே, இன்று மக்கள் இயக்கங்களாக உள்நாட்டு உலக அரசுகள் ஏற்றுக் கொள்கின்றன. ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு எதிரான எல்லாம் தீவிரவாதம், பயங்கரவாதம் என காட்டப்படுகிறது. அடக்கப்படுகிறது.

தேசிய இன விடுதலைக்காக போராடுகின்ற மக்கள் மத்தியில் இருந்து, யுத்தப் பகுதியை விட்டு வெளியேறும் நடுத்தர - மேல்தட்டு

www.tamilarangam.net



மக்கள் பிரிவை, ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகள், தங்கள் நாட்டில் அகதிகளாகத் தஞ்சம் கொடுத்து; தமது நாட்டு குடியுரிமையும் வழங்கியுள்ளன. வளர்ந்துவரும் ஒரு தேசிய இனத்தின், தேசியப் பொருளாதாரத்தின் தீர்மானமான பிரிவு மக்களை, உலகில் பல்தேசிய நாடுகளின் பிரஜைகளாக்கி விடுவது. தேசியப் போராட்டத்தின் சமூக அடித்தளத்தை சீர்குலைத்து விடுவது. போராடிக் கொண்டிருக்கின்ற தேசத்தில் பல்தேசிய நாட்டு பண வருமானங்கள் மூலம், பொருளாதார பலம் பெற்ற அம்மக்கள் பிரிவு, ஏகாதிபத்திய எதிர்ப்பற்ற ஒரு சமூக சக்தியாக, சமரசக்திகளாக மாற்றப்படுகிறது. இம்மக்கள் பிரிவில் பிரதானமாக தங்கி நிற்கும் அரசியல் ஆயுதப் போராட்ட சக்திகளும், உள்நாட்டு அரசை எதிர்த்து மூர்க்கமாக போர் புரிந்தாலும், ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட போராட்டமாக தேசிய விடுதலை இயக்கத்தை முன்னெடுக்க முடியாது தடுமாறுகின்றன. இறுதியில் ஏகாதிபத்தியங்களின் நவீனமயமான உலகமயமாக்கல் கொள்கைக்குள் சமரசப் படுகின்றன. சமூகக் கொந்தளிப்பை, விடுதலைப் போராட்ட தளத்தை, ஏகாதிபத்தியங்களால் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் விடுதலைப் போராட்ட தலைமைகளை நவீனமயமான உளவு நடவடிக்கை, பொருளாதார ஊடுருவல் மூலம் திசைதிருப்புகின்றன. தனிஇயக்க சர்வாதிகார போராட்ட களங்களை திட்டமிட்டு உருவாக்குகின்றன. போராட்ட களத்தின் எழுச்சியை - வீழ்ச்சியை இலகுவாக கட்டுப்படுத்துகின்றன.

அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளிலுள்ள புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் இருந்து ஒவ்வொரு நாடும், தங்களின் உலக ஆதிக்கத்தை இலங்கையில் தொடர்ந்து நிறுவுவதற்கும் பேணவும், ஏகாதிபத்திய முதலாளித்துவ சார்பு கொண்ட பலமான அரசியல் சக்திகளை, தொழில் ரீதியான NGO தலைவர்களை, சர்வதேசிய நிறுவனங்களில் பயிற்சி அளித்து உருவாக்கியுள்ளன. அரசு கட்டுப்பாட்டுப் பகுதியிலும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் என்றும் தடை செய்யப்படாத சமூக நிறுவனங்களான NGO க்களில், இப்போது சர்வதேச நிறுவனங்களில் பயிற்சி பெற்ற புலம் பெயர்ந்த புதிய பரம்பரையும் வந்து சேர்ந்து இயங்கத் தொடங்கியுள்ளது. கனடா அரசால், கொழும்பில் உருவாக்கப்பட்டுள்ள ''கொள்கை மாற்றுமையம்'' (APC) ஒரு உதாரணம் மட்டுமே. யாழில் 47 NGOக்களின் கூட்டம், திருகோணமலையில் 60 NGOக்களின் கூட்டம் சமாதானப் பேரணி, சமாதானம் வேண்டி பாதயாத்திரை, மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் செய்ய வேண்டிய அத்தனை நிவாரண வேலைகளுக்கும் NGO க்கள் உள்ளன.

www.tamilarangam.net



உருவாகின்றன. இந்தளவுக்கு உலகமயமாக்கலுக்கு இசைவான சமூக நிறுவனங்களை, ஏகாதிபத்திய நாடுகள் நிலைநிறுத்தியுள்ளன. 20 வருடங்களாக தேசிய இன விடுதலைக்காக, யுத்தம் நடந்து கொண்டிருக்கும் தேசத்தில் இது நடந்திருக்கிறது. நடந்து கொண்டிருக்கின்றது. IBCஇல் கூட NGOக்களின் செயல்பாடு பற்றி புகழப்படுகிறது.

ஏகாதிபத்திய நாடுகள் தங்களுக்கு இடையிலான, உலக சந்தைப் போட்டியில், புதுக் கொலனிய நாடுகளின் உள்நாட்டு அரசின், மொழி, இன, மத வகைப்பட்ட தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக வெடித்த தேசிய இன விடுதலைப் போராட்டங்களையும் பயன்படுத்த தவறவில்லை. அப்போராட்டக் களங்களிலுள்ள தனிநபர் பயங்கரவாத கொள்கை கொண்ட குட்டி முதலாளிய இயக்கங்களை கண்டறிந்து உதவியளித்து வளர்த்தன. தங்களின் அரசு பயங்கரவாத கொள்கைக்கு பயன்படுத்தின. இச்சூழ்ச்சியை எல்லை முரண்பாடுள்ள அண்டை நாடுகளும், பிராந்திய விரிவாதிக்க நாட்டு அரசுகளும் கூட செய்தன. செய்கின்றன. எல்லை தாண்டிய அரசு பயங்கவாதத்தை ஊக்குவித்த உலக அரசுகள், தாங்களே அதனால் இன்று தாக்கப்படும்போது ''பயங்கரவாதம், அய்யோ பயங்கரவாதம்!'' என கூக்குரல் இடுகின்றன. உலகளவில் பயங்கரவாதத்தை ஒடுக்க சபதம் ஏற்றுள்ளன. அய்நா சபையில் (U.N.) 1373 இலக்கத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன.

ஏகாதிபத்திய உலகமயமாக்கல் கொள்கையும், மற்றைய நாடுகளை, தேசங்களை கொள்ளையிட்டு சுரண்டும் நடைமுறையும் என்றும் இல்லாதளவுக்கு வளர்ந்துள்ளது. புதுக் கொலனிய நாடுகளில் அது மிக உயர்ந்த நிலையை நவீனமயமாக்கல் வழியாக எட்டியுள்ளது. உலகமயமாக்கப்பட்டுள்ள உற்பத்தியும் வணிகமும் (M.L.M) நிதித் தொழிலும் கடுமையான சந்தைப் போட்டியை எதிர்க் கொள்கிறது. பல்தேசியக் கொம்பனிகளின் (MNC) தொழில் ஆதிக்கத்தால், தொழிற்துறை, விவசாயம், மீன்பிடி, வணிகம் நிதித்தொழில் என தேசியத் தொழில்கள் மூச்சுத் திணறுகிறது. மூடப்படுகிறது. ''ஒரு பொருளுக்கு இன்னொரு பொருள் இலவசம்'' என்றளவுக்கு சந்தைப் போட்டியில் உற்பத்தி தேக்கம் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியமும் பல்தேசிய கொம்பனிகளும், உலக நிறுவனங்களும் 'ஒற்றை உலக ஒழுங்கு முறைக்குள்' உலகத்தை சுரண்டி அடக்கி ஆழ பெரும் பிரயத்தனம் செய்கின்றன. போர் இல்லாத உலகம் பற்றி பேசும், புதுக் கொலனிய நாடுகளின் பாதுகாப்பு செலவை குறைக்க

www.tamilarangam.net



நிர்பந்திக்கும் உலக நிறுவனங்கள், ஏகாதிபத்திய அரசுகள் தங்களின் பாதுகாப்பு செலவையும், ஆயுத உற்பத்தியையும் நவீனமயப்படுத்தி அதிகரித்து வருகின்றன. அமெரிக்காவின் இராணுவ செலவு அதிகரிப்பு அண்மிய உதாரணம். ஆனால் ஈராக்கின் சுய ஆயுத உற்பத்திக்கு தடை விதிக்கப்படுகிறது. அமெரிக்காவும், பிரிட்டனும் இன்னோர் வளை குடா மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு தயார் செய்கின்றன.

இந்தோனேசியா, சிம்பாவே, ஆர்ஜென்டினா என புதுக் கொல னிய நாடுகளில் பொருளாதார நெருக்கடி முற்றி வெடித்துள்ளது. புதுக் கொலனிய நாடுகளின் மக்கள் மத்தியில், பல்தேசிய கொம்பனிகளுக்கு (MNC) உலக நிதி நிறுவனங்களுக்கு (WFI) எதிரான, ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலை உணர்வும், போராட்டமும் வெளிப்படுகின் றன. வெடிக்கிறது. இந்நாடுகளில், உள்நாட்டில் தேசிய இன விடுத லைக்காக போராடிக் கொண்டிருக்கும் மக்கள் விடுதலை இயக்கங்கள், நாடு தழுவிய ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத் துக்கு முன்தளமாக மாறி வருகின்றன. ஈரான், ஈராக், வடகொரியா போன்ற நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பை, அந்நாடு களின் அரசுகளும், ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளும் கூட வெளிப்ப டையாக வெளிப்படுத்த வேண்டிய நிலைக்கு வந்துள்ளன. பாலஸ்தீன மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் 1993-இன் நோர்வேயின் ''ஒஸ்லோ ஒப்பந்தத்தையும்'' மீறி, புதிய புதிய பரிமாணங்களுடன் தீர்வு இன்றி வெடித்துக் கொண்டிருக்கிறது. யாசீர் அராபத்தை வீட்டுக் காவலில் வைக்குமளவிற்கு இஸ்ரேலிய இராணுவம் சென்றுவிட்டது. ஏகாதிபத்தியங்கள் எதைச் செய்தும் சமரசப்படுத்தி நிறுத்த முடிய வில்லை. இறுதியாக இஸ்ரேல் இனவாத அரசு, பாலஸ்தீன தலை வரின் வீடு, பாலஸ்தீன ஒலி, ஒளி(WOP) பரப்பு நிலையங்கள் மீது ஏவு கணை வீசி அழித்துள்ளது. முப்படைகளும் மூர்க்கமாக - பாலஸ்தீன அகதிகள் அதிகமாகவுள்ள ''ஜபாலியா'' பகுதி மற்றும் ரமல்லா நகரம் மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. ''சட்ட விரோத ஆக்கிர மிப்பு'' என கோபி அன்னான் பாதுகாப்பு கவுன்சிலில் பேச வேண்டி யளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தின் அமெரிக்க புதுக்கொலனிய நாடு களில், ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட தேசிய விடுதலைப் போராட் டத்துக்கான புறச்சூழல், ஏகாதிபத்திய சகாப்தத்தில் மீண்டும் உருவா கியுள்ளது. இத்தகைய தேசிய விடுதலைப் போராட்டம் நேரடியாக ஏகாதிபத்தியங்களையும், உள்நாட்டு இன, மதவாத தரகு அரசு

www.tamilarangam.net



களையும் தூக்கியெறிவதாகவே இருக்கும். புதுக்கொலனிய நாடுகளில் உள்ள ஆயுதம் தாங்கிய தேசிய இன விடுதலைப் போராட்டங்கள், நாடு தழுவிய ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு ஊக்கத்தையும், வீரியத்தையும் விரைவாக உருவாக்கிக் கொடுக்கும். உறுதியான பின்தளங்களாக மாறிவிடும், முதல் கட்ட விடுதலைப் பிரதேசங்களாக உருவாகும். இதனைப் புரிந்து கொண்டுள்ள ஏகாதிபத்திய நாடுகள் - உலக நிறுவனங்கள் ஏகாதிபத்திய உலகமயமாக்கல் கொள்கைக்கு முரணற்ற, எதிர்ப்பு இல்லாத, ஆயுதம் தாங்கிய தேசிய இன விடுதலை இயக்கங்களையும் - உள்நாட்டு அரசுகளையும் நிர்பந்தப்படுத்தி ஆவது நிரந்தர யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை - அரசியல் தீர்வுக்குள் மூழ்கடிக்கும், உலகம் தழுவிய முயற்சிகளில் இறங்கியுள்ளன. சிறீலங்கா அரசு - புலிகள் செய்துள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமெரிக்கா, பிரிட்டன், யப்பான், இந்தியா, E,U, கனடா உடனடியாக வரவேற்றுள்ளன.

ஏகாதிபத்திய உலகமயமாக்கல் கொள்கையுடன் முரண்படும் எதிர்த்து நிற்பதற்கான சமூக அடித்தளம் கொண்ட தேசிய இன விடுதலை இயக்கங்களை, ஏகாதிபத்தியங்கள் தங்களின் முதல் கட்ட பயங்கவராத இயக்க பட்டியலில் குறித்து வைத்துள்ளன. புதுக்கொலனிய உள்நாட்டு அரசுகளுடன் கூட்டிணைந்து அவ்வியக்கங்களை அழிக்க தொடங்கியுள்ளன. பிலிப்பைன்சில் அமெரிக்க சிறப்பு இராணுவம் நேரடியாக இறங்கியுள்ளது கவனிக்கத்தக்கது. கொலம்பியாவில் இரு தரப்பையும் நிர்ப்பந்திக்கிறது.

ஏகாதிபத்திய உலகமயமாக்கல் கொள்கையால், பல்தேசியக் கொம்பனிகளால் (MNC) தொழிலாளிவர்க்கம் தேசம், நாடு என எல்லைக் கடந்து உலகம் முழுவதும் விரவிவிடப்பட்டுள்ளது. அதே போன்று உள்நாட்டு யுத்தங்களால், வெளியேறும் அகதிகளும் தேசம் நாடு என கடல் கடந்து உலகம் முழுவதும் பரவியுள்ளனர். உயிரை துச்சமாக மதித்து உலகின் எந்த மூலைக்கு சென்றாவது உழைக்கவும், தங்கள் குடும்பங்களை பாதுகாக்கவும் முயலும் மக்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது. 2002-இல் மட்டும் இலங்கையில் இருந்து படகுகள் மூலம் கிளம்பிய 288 இளைஞர்கள், சிறீலங்கா கடற்படையினரால் கடலில் கைது செய்யப்பட்டுள்ளனர். கடற்கொந்தளிப்பில் 50-க்கு மேற்பட்டவர்கள் மூழ்கி இறந்துள்ளனர். இவற்றைவிட 400 பேர் சூயஸ் கால்வாய் வழியாக சென்று கொண்டிருக்கும்போது இத்தாலி

www.tamilarangam.net



கடற்கரையில் 23.02.2002 இல் இத்தாலிய கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேபோன்று ஒஸ்ரேலிய தீவுகளில் இறங்கிய 39 பேர் சிறீலங்காவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஒஸ்ரேலியா விலும், பிரிட்டனிலும் அகதிகள் தங்களின் உரிமைக்காக போராடத் தொடங்கியுள்ளனர். சொந்த தேசங்களில் இருந்து வேர் பிடுங்கப்பட் டுள்ள உலகில் சிதறுண்டுள்ள இம்மக்கள், தங்கள் வாழும் நாடுகளில் எதிர்கொள்ளும் சமூக பொருளாதார - கலாச்சார உளவியல் நெருக்கடி களால், இவ்உலக சமூக அமைப்பு மீது வெறுப்புக் கொள்கிறார்கள். விரக்தி அடைகிறார்கள். இவர்களது வெறுப்புகள், தார்மீகக் கோபங்கள் இவ்உலகை ஆட்டிப் படைக்கும் ஏகாதிபத்திய சமூக அமைப்பின் மீது வெளிப்பட வேண்டும். ஏகாதிபத்தியங்களின் தலைமைப் பொறுப்பை எடுத்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் உல கத்தை இரும்புச் சட்டியில் போட்டு வறுத்தெடுக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். யுத்த நிறுத்தத்தை புலிகள் மீறக்கூடாது என அமெரிக்கா எச்சரிக்கிறது.

உலகில் குறுகிய நோக்கம் கொண்ட மத, இன, நிறவாத இயக் கங்கள், உலகம் முழுவதும் சிதறுண்டுள்ள மக்களின் சமூக அவலங் களை பயன்படுத்தி, தங்களின் சமூக அடித்தளத்தை உலகமயமாக்க முயல்கின்றன. மக்களிடம் உள்ள மத உணர்வுகளை, இனப் பெருமி தங்களை, நிறத்துவேசங்களை தூண்டி உலகளவில் ஒருங்கிணைப் பதன் மூலம், தத்தம், மத, இன தேசிய விடுதலை இயக்கங்களுக்கு உதவ முடியும். தங்களை நசுக்கும் ஏகாதிபத்திய நாட்டை பயமுறுத்த முடியும் என்ற கொள்கையில் இயங்குகின்றன. ஆனால் உலக ஏகாதி பத்திய சமூக அமைப்பை இவ்இயக்கங்களால் தோற்கடிக்க முடியாது. இவர்களின் சித்தாந்தம், கொள்கை என்பன, உலக நாடுகளிலுள்ள அனைத்து ஒடுக்கப்படும் தேசிய இனங்களின், சுரண்டப்படும் உழைக்கும் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பை, போராட்டத்தை சம அந்தஸ்துடன் உலகளவில் அய்க்கியப்படுத்தும் அடித்தளம் இல்லா தவை இச்சித்தாந்தங்கள்.

செப்.11, தாக்குதல் பற்றி புஷ் கூறும் போது, இத்தகைய தாக்குல் களால் ''உலக சந்தைப் பொருளாதாரத்தை தடுத்து நிறுத்திவிட முடியாது'' என்றார். அண்மையில் நியூயோர்க் நகரில் நடைபெற்ற (WFO) உலக நிதி நிறுவன அமைப்பின் கூட்டமும் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தியது. உண்மைதான். சந்தைப் பொருளாதார முறையுடன் முரண்படாத தேசிய - குட்டி முதலாளிய வர்க்கம், தன்னுடன் முரண்

www.tamilarangam.net



படுபவர்களை, எதிரிகளை பழிவாங்கும் அதனது போராட்ட வடிவமான தனிநபர் பயங்கரவாத வழியும், நவீனமயமான தாக்குதல் முறைகளும் மட்டும், ஏகாதிபத்திய உலக அரசு பயங்கரவாதத்தை வேரோடு அழித்தொழிக்க முடியாது. ஆனால் உலகம் அதிர்ந்து போகும்படியான சில அதிர்ச்சியூட்டும் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கும். ஏகாதிபத்திய ஒடுக்குமுறை அதிகரிக்க, இதுவும் அதிகரிக்கும்.

ஏகாதிபத்திய - புதுக்கொலனிய சமூக - பொருளாதார அடித்தளம், கொலனிய கட்டம் - புதுக்கொலனிய கட்டம் பொதுவான - குறிப்பான அம்சங்கள், மற்றும் சமகால உலக பொருளாதார அமைப்பு, உலகமயப்பட்ட அரசியல், உலகமயப்பட்ட அதிகார நிறுவனங்கள் - ஊடகங்கள். புதுக்கொலனிய நாடுகளின் தேசிய விடுதலை எழுச்சிக்கான உட்கூறுகள், அய்க்கிய முன்னணிக் கொள்கையில் மூன்றுலகக் கோட்பாட்டின் தாக்கங்கள். தேசிய விடுதலை - வர்க்க விடுதலை உறவுகள், உலக சோசலிசப் புரட்சிக்கும் - தேசிய விடுதலைப் புரட்சிக்கும் இடையிலான இன்றைய சங்கிலிப் பிணைப்பு, புதுக்கொலனிய நாடுகளின், புதிய சனநாயக புரட்சித் திட்டம் நிலப்புரட்சி - தேசிய விடுதலைப் புரட்சி என்ற இரண்டு அம்சங்களையும் கொண்டிருக்கிறது. குறிப்பான கால கட்டத்தில் குறிப்பான நாட்டின், குறிப்பான பகுதியில் இரண்டில் ஒன்று முதல்நிலை அம்சமாகிறது; ஆனால் ஒன்றைக் கைவிட்டு மற்றயதை மட்டும் வெற்றி நோக்கி கொண்டு செல்ல முடியாது என்பதை தொழிலாளி வர்க்கத்துக்கு தெளிவுபடுத்துகிறது. இவை குறித்த புரிந்துணர்வுதான் தமிழீழம் - சிறீலங்காவில் உள்ள புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளுக்கு இடையில் அடிப்படையாக இன்று தேவைப்படுகிறது. உலக ஏகாதிபத்தியத்தை உலக தொழிலாளிவர்க்க இயக்கத்தால் மட்டுமே வெல்லமுடியும். இது மனித குலத்தின் வரலாற்று வளர்ச்சி விதி. தேசிய விடுதலைப் போராட்டத்தை, புதிய சனநாயகப் புரட்சியை முன்னெடுக்கும், புதுக் கொலனிய நாடுகளின் தொழிலாளி வர்க்க கட்சிகளும், பரந்துபட்ட மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டமும்தான், உலக ஏகாதிபத்தியங்களையும் - உள்நாட்டு அரசுகளையும் தூக்கி எறிந்து உண்மையான தேசிய விடுதலை வெல்ல முடியும். புதிய சனநாயக அரசுகளை நிறுவ முடியும். இத்தகைய புரிந்துணர்வு உள்ள தமிழீழ புதிய சனநாயக தேசபக்த சக்திகள் முதலில் ஒன்றுபட வேண்டும்.

— தமிழரசன்

www.tamilarangam.net



# தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசிய சக்தி ஆகுமா?

"தமிழ் தேசிய கூட்டமைப்பு திசை மாறி விடக்கூடாது'' என்ற சிவராம் அவர்களின் கட்டுரையையும் (நிகரி-2) அதைத் தொடர்ந்து ஏ. யதீந்திரா அவர்கள் எழுதிய கட்டுரையையும், குவேனி என்பவர் எழுதியிருந்த கடிதத்தையும் (நிகரி இதழ் -3) படித்ததில் என்னுள் எழுந்த கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். இந்தக் கருத்துக்கள், தமிழ் தேசிய அரசியலை முன்னின்று நடாத்தவல்ல ஆற்றலும் தகுதியும் படைத்த ஒரு கட்சியின் தேவையை உணர்பவர்கள் மத்தியில் ஒரு திறந்த கலந்துரையாடலுக்கு வழிவகுக்குமானால் அது மிகவும் பயன்மிக்கதாக அமையும் என்று கருதுகிறேன்.

மேற்சொன்ன மூன்று கட்டுரைகளையும் கவனமாகப் படிக்கும் ஒருவருக்கு அவற்றுக்குள் பொதுமைப்பாடாக அமைந்திருக்கும் ஒரு முக்கியமான விடயத்தை இனங்கண்டு கொள்வது ஒன்றும் கடினமானதல்ல. அதாவது தமிழர் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தேசியத்தின் இன்றைய அரசியல் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இயங்கவல்ல ஒரு வெகுஜன அமைப்புக்குரிய அடிப்படைகளைக் கொண்டிருக்கிறது. அதிலுள்ள அரசியல்வாதிகளின் சுயநலப் போக்குகளும், சுத்துமாத்துக்களும் இல்லாவிடில், இந்தக் "கூட்டமைப்பை'' நிறுவனமயப்படுத்துவதன் மூலமாக, தமிழ் தேசியத்தின் தலைமைத்துவத்தை உருவாக்கி விடலாம் என்ற கருத்து இக்கட்டுரைகளின் அடிப்படையாக அமைந்துள்ளது. ஆகவே, சுயநலப் போக்கைக் கிள்ளி எறியும் விதத்தில், அதை அனுமதிக்காத விதத்தில் அதை அம்பலப்படுத்தி அரசியல்வாதிகளை வழிக்குக் கொண்டு வந்து தமிழர் தேசிய மாநாடு, தமிழர் அரசியல் அபிலாசைகளின் தேசியப் பிரகடனம், நாடாளுமன்றத்தில் எமது அரசியல் செயற்பாடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள், அரசியல்யாப்பு என்று இன்னோரன்ன விடயங்களை நடைமுறைப்படுத்தினால், அது பரந்துபட்ட தமிழ் மக்களை அணிதிரட்டவல்ல வகையில் வடிவமைக்கப்பட்டு விடலாம் என்று இக்கட்டுரைகளின் சாரம் அமைந்துள்ளது.

இவற்றில் குவேனி அவர்களின் கடிதம் சற்று மாறுதலாக, இந்த "சந்தர்ப்பவாத தேசியக் கூட்டமைப்பு தலைமை ஏற்பதை மறுக்கிறது.

www.tamilarangam.net



ஆனால், பதிலாக மக்களின் பல்வேறு வெகுஜன அணிகளின் (கடற்றொழிலாளர் அமைப்புகள், மாணவர், ஆசிரியர், சிவில் தொழிலாளர் அமைப்புக்கள், அன்னையர் முன்னணி, மனித உரிமை அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் தேசபக்த ஊடகவியலாளர்கள், அறிவுத் துறையினர் ஆகியோரின் அணிகள்) தலைமைகளில் இருந்தே தமிழ் தேசியத்திற்கான தலைமை உருவாக்கப்பட்டு அதற்கு நிறுவன வடிவம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இதில் இன்றைய தமிழ் தேசிய அமைப்புகள் அங்கம் வகிக்கலாம் என்று குவேனி அவர்கள் தமது கடிதத்தில் மேலும் தெரிவிக்கின்றனர். அதாவது இந்த அமைப்புக்களின் கூட்டு தமிழ் தேசியக் கோரிக்கைகளின் தலைமையாக உருவெடுக்க முடியும் என்று அவர் கருதுகிறார்.

ஆக, அடிப்படையில் தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கு டி. சிவராம் அவர்களும் யதீந்திரா அவர்களும் முடியும் என்று கருதுவதுபோல இன்று இயங்கும் வெகுஜன அணிகளுக்கு தமிழ் தேசிய அரசியலுக்கு தலைமை தாங்கும் சக்தி இருப்பதாக குவேனி கருதுகின்றார் என்பதையே அவரது கடிதம் காட்டுகிறது. வெகுஜன அமைப்புகளின் தலைமைகளை இணைப்பதன் மூலம் ஒரு கட்சியாக அதை மாற்றிவிட முடியும் என்பது அவரது கருத்தாக இருக்கின்றது.

இந்த மூன்று கட்டுரையாளர்களினதும் எதிர்பார்ப்புகள் மிகவும் தெளிவானவை. தமிழ் தேசியத்தின் விடுதலையை அடிப்படையாகக் கொண்ட நல்நோக்கத்துடன் அவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள். தமிழ் தேசியத்தின் தேசிய அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான வெகுஜன மட்டத்திலான அரசியற் செயற்பாட்டுக்கு அவசியமான ஒரு அமைப்பின் அவசியத்தை வலியுறுத்துவதே இக்கட்டுரைகளின் அடிப்படையாகும். அவர்களது விருப்பத்தையும் எதிர்ப்பையும் யாரும் சந்தேகிக்க முடியாது.

ஆனால், நம்முன்னாலுள்ள கேள்விகள் இவைதான்.

தமிழ் தேசிய சக்திகள் எனப்படுவோர் யார்? அவர்களது இன்றைய எதிர்பார்ப்பு என்ன? இந்த தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கும் சரி. பிற வெகுஜன அமைப்புக்களுக்கும் சரி இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் நோக்கிலமைந்த வேலைத்திட்ட நடைமுறை ஒன்று ஏற்கனவே இருக்கிறதா? இவற்றிற்கு தேசிய அபிலாசைகளை அடையும் நோக்குடன் செயற்படும் அரசியல் அடிப்படைகள் உள்ளனவா?

www.tamilarangam.net



இந்தக் கேள்விகளுக்கு விடை காணப் புறப்படும் முன்பாக மேற்சொன்ன இந்த அமைப்புகளின் வரையறைகள் என்ன? அவை எதிர்கொள்கின்ற பிரதான பிரச்சினைகள் என்ன? அவை எதற்காக அமைப்பாக உள்ளன என்பதை அடையாளம் காண்பது முக்கியமான தாகும். அரசியல் ''கட்சி''யையும், வெகுசன அமைப்புகளையும், தேர்தல் கால கூட்டுக்களையும் ஒரேவிதமாக கணிக்கும் போக்கு மிகவும் தவறானது மட்டுமல்ல. ஆபத்தானதும் கூட. இது கட்சி யையும் இல்லாதொழித்து, வெகுஜன அமைப்பு செயற்பாடுகளையும் பயனற்றதாகி விடும் ஒருநிலைக்கு இட்டுச் செல்லக் கூடியது. கடந்த கால வரலாற்று முழுவதிலும் நமக்கு இது தொடர்பான பல கசப்பான அனுபவங்கள் உதாரணங்களாக இருக்கின்றன.

பாராளுமன்ற ஆசனங்களைக் குறியாகக் கொண்டு வடிவமைக்கப் பட்ட கட்சிகளின் பாராளுமன்ற தேர்தல் முடிவுகளை அடுத்து சின்னா பின்னமாகிப் போவதை யாருக்கும் சொல்லிப் புரியவைக்க வேண்டிய அவசியமில்லை. தவிர்க்க முடியாத ''சட்ட ரீதியான பந்தங்களில் தொங்கிக் கொண்டிருக்கும் பதவிகளைத்தவிர, தேர்தலின் பின் அவர் களை இணைத்து வைத்திருப்பவை வேறொன்றுமில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இந்த தமிழர் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசியத்தின அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூட்டாக நின்று போராடி, வெகுஜனங்கள் மத்தியில் இயக்கம் நடாத்தி, தனது போராட்டத்தின் ஒரு வடிவமாக தேர்தலில் குதித்த ஒரு அமைப்பு அல்ல. மாறாக தேர்தலில் தமிழர்க்கு அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் ஒரே நோக்கத்திற்காக கூட்டுச் சேர்ந்து கொண்டு உருவான ஒரு அமைப்பு. (இந்தக் கூட்டு அவசியமானது, சில உடனடிப் பயன் களை தரக்கூடியது என்பதை மறுப்பதற்கில்லை) தவிரவும் இது தமிழ் தேசியத்தின் தேசிய அபிலாசைகள் என்று குறிப்பிட்டவை எவையும் இந்தப் பாராளுமன்ற கதிரைகளில் உட்கார்வதால் மட்டும் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் உருவானவை உண்மையும் அதுதான். பாராளுமன்றக் கதிரைகளில் இருந்த படி செயற்படுவதால் தமிழர் அபி லாசைகளை ஒருபோதும் பெற்றுவிட முடியாது. அதற்கு பாராளுமன் றத்தை விட வெளியே நிறைந்த தியாகம் செறிந்த செயற்பாடுகள் (ஆயுதப் போராட்டத்தைக் குறிப்பிடவில்லை) அவசியம். அவற்றைச் செய்ய இவை மக்கள் மத்தியில் இறங்கத் தயாராக இருக்க வேண்டும். (இக்கூட்டு பாராளுமன்ற மட்டத்தில் தமிழ் தேசிய அபிலாசைகளுக் காக செயற்படுவதற்கு அதிகப்படியான பலத்தை கொடுத்திருப்பதை

www.tamilarangam.net



மறுக்க முடியாது. ஆனால் அதன் நோக்கம் அதுவல்ல என்பதால் ''செவிக்குணவில்லாத போது வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும்'' என்று தமிழ் தேசிய அபிலாசைகளுக்காக அவ்வப்போது அது கொஞ்சம் செயற்படக்கூடும்).

வெகுஜன அமைப்புக்களை எடுத்துக் கொண்டால் அவை, தத்தமது தனிப்பட்ட உடனடித் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டவை. தமிழ் தேசிய அபிலாசைகளுக்காக உருவாக்கப் பட்டவை அல்ல. பகுதி நலன்களுக்கான போராட்டங்களிற்காக உரு வாகும் வெகுஜன அமைப்புக்கள் தேசத்தின் பிரதான முரண்பாட் டினை தீர்ப்பதற்கான அமைப்புக்களாக ஒரு போதும் வளர்வதில்லை. எப்படி தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க உரிமைக்காகவும் தொழி லாளர் நலன்களுக்காகவும் போராடுகின்ற அதேவேளை ''தொழிலாள - முதலாளிய'' வர்க்கங்களுக்கிடையிலான ''இணக்கம் காண முடி யாத'' பகையை இல்லாமலாக்க முடியாமல் இருக்கின்றனவோ அவ்வாறானதே இதுவும். உதாரணமாக கடற் தொழிலாளரின் வெகுஜன அணிகளின் இன்றைய பிரதான பிரச்சனையாகவுள்ளது கடல் வலயக் கட்டுப்பாடுகள் என்றால் அவை அகற்றப்பட்டால், அதன்பின் அவர்களுக்கு தேசியப் பிரச்சினையுடன் நேரடிச் சம்பந்தப் பட்ட முக்கிய பிரச்சினை இல்லாது போய்விடும். பிறகு சந்தைப்ப டுத்தல், விநியோகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பிரதானமாகி விடும். தமிழர் தேசிய அபிலாசைகளுக்கும் அவர்களது வாழ்வுக்கு மான இணைப்புக் கண்ணியை அதன்பின் அவர்கள் இழந்து விடு வார்கள். இது எல்லா வெகுஜன அணிகளுக்கும் பொருந்தும்.

இதுதான் இந்த தமிழ் தேசிய எழுச்சியை நிறுவனமயப்படுத்து வதில் பாராளுமன்ற அரசியற் கட்சிகளையும் வெகுஜன அணிகளையும் தலைமையேற்க வேண்டுமென எதிர்பார்ப்பதில் உள்ள ஆபத்தாகும்.

ஆக, மொத்தத்தில் பாராளுமன்ற ஆசனங்களைக் குறியாகக் கொண்டு உருவான ஒரு கட்சியோ, பகுதி நலன்களுக்காக உருவான ஒரு வெகுஜன அமைப்போ அல்லது அமைப்புகளோ ஒருபோதும் மொத்த தேசிய அபிலாசைகளுக்கான ஒரு அமைப்பாக வளர்ந்து வரு வதில்லை. அதற்கான அரசியல் தத்துவார்த்த தளத்தை அவை கொண்டி ருப்பதும் இல்லை.

www.tamilarangam.net



அவை எந்த நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் நிறைவேறுகையில் கலைந்து போகின்றன. அல்லது அவற்றை அடையும் பணியில் தம்மை முழுமையாக மூழ்க வைத்துக் கொள்கின்றன. அவை ஒரு போதும் முழுத் தேசத்துக்கும் வழிகாட்டக் கூடிய தலைமைப் பாத்திரத்தை ஏற்கக் கூடியன அல்ல. அப்படி எடுக்கும் சந்தர்ப்பம் சிலவேளைகளில் வாய்த்தால் அப்போது, ஒன்றில் அதைப் பறிகொடுத்து விட்டு நிற்பார்கள். அல்லது தமது பகுதி நலனையே முழுத் தேசத்தின் நலனாக குறுக்கிக் கொண்டு விடுவார்கள். இலங்கையின் பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணி ஈறான தமிழ்க் கட்சிகளும் இவற்றிற்கு நல்ல உதாரணங்கள்.

தமிழ் தேசியத்தின் அரசியல் அபிலாசைகள் உண்மையில் அதன் தேசிய சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டவை. ஒரு இனம் என்ற விதத்தில் இந்த நாட்டின் சகல இனங்களுடனும் சமத்துவமாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கு உள்ள உரிமை அது. அது மறுக்கப்படும் பட்சத்தில், அதைப் புரிந்துணர்வு அடிப்படையில் பெற்றுக் கொள்ள முடியாத பட்சத்தில் சமத்துவத்தையும், கௌரவத்தையும் பேணும் விதத்தில் பிரிந்து போவதற்கான உரிமை அது.

இந்த உரிமை நடைமுறையில் அரசியல், கல்வி, கலை, கலாச்சாரம் உள்ளிட்ட சகல துறைகளிலும் சமத்துவமானதும், கௌரவமானதுமான ஒரு நிலையை ஏனைய இனங்களைப் போல அனுபவிப்பதாகவும் ஏனைய இனங்கள் அனுபவிப்பதை இயல்பானதாக ஏற்றுக் கொள்வதாகவும் அமைய வேண்டும்.

இந்த அடிப்படைக்காக செயற்படுவதை நோக்கமாகக் கொண்டு உருவாகும் ஒரு கட்சியால் அல்லது வெகுஜன அணியால் மட்டுமே தமிழ் தேசியத்தின் அபிலாசைகளை முன்னிறுத்தி இறுதி வரை செயற்பட முடியும். கடல்வலயத் தடையை நீக்குவதற்கான போராட்டமும் சரி, மனித உரிமைக்கான போராட்டமும் சரி இந்த நோக்குடன் செயற்படும் ஒரு அமைப்பாலேயே முரணற்ற ஜனநாயக முறைப்படி செயற்படுத்தப்பட முடியும்.

நாட்டின் இன்றைய பிரதான பிரச்சினையைக் கையாள்வதற்கு, அதாவது தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக போராடுவதற்கு ஏற்றதாக அந்த அமைப்பு தன்னை உருவாக்கிக் கொள்ள

www.tamilarangam.net



வேண்டும். தேசிய சக்திகள் யார் என்பதை அது தெளிவாக இனங் கண்டு கொள்ள வேண்டும். தேசிய விடுதலைக்கான - சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் இயங்கும் சக்திகள் யார், பங்காளிகள் யார், ஆதரவாளர்கள் யார், எதிரிகள் யார் என்பதை இனங்காணக் கூடியதாக அது அமைய வேண்டும். மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள் உள்ளிட்ட தேசிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருக்கும் அனைத்து தமிழ் மக்களும் தமிழ் தேசிய சக்திகள் என்பதையும், தேசிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருக்கும் முஸ்லீம் மக்கள் இப்போராட்டத்தின் பங்காளிகள் என்பதையும், பரந்துபட்ட சிங்கள மக்கள் இதன் ஆதரவாளர்கள் என்பதையும் அது விளங்கிக் கொண்டதாக அமைய வேண்டும்.

தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம், போராட்டத்தின் தன்மைக்கும் அவசியத்திற்கும் ஏற்ப வெவ்வேறு வடிவங்களை எடுக்கலாம் என்பதையும் இவற்றில் பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளாட்சி சபை உள்ளிட்ட அரசாங்கங்களுக்கான ஆசனங்களைப் பெறுவதற்காக தேர்தலில் நிற்பது முதல் பரந்துபட்ட வெகுஜன எழுச்சிப் போராட்டங்கள், மற்றும் ஆயுதப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்ட வடிவங்களும் அடங்கும் என்பதையும் அது புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் அரசியல் சூழல், மாறிவரும் நிலைமைகளுக்கேற்ப போராட்ட வடிவங்கள் மாறுபடும் என்பதையும், அதைப் புரிந்து கொண்டு போராட்டத்தை வழி நடாத்த வேண்டும் என்பதையும் அது தெரிந்திருக்க வேண்டும். மக்களிடையே உருவாகும் முரண்பாடுகளைக் கையாள்வதிலும், முரணற்ற ஜனநாயகத்தை கடைப்பிடிப்பதிலும் அது மிகவும் கவனமாக செயற்படுவதாக அமைய வேண்டும்.

இந்த வகையில் போராட்டத்தை நடாத்துவதற்குரிய ஆற்றல் கொண்டதாக அந்த அமைப்பு அமைய வேண்டும்.

— அரவிந்தன்

நன்றி: நிகரி

www.tamilarangam.net



# போராளிகளே!! திரும்பிப் பார்ப்போம்...

இலங்கையில் தேசிய இன ஒடுக்குமுறைக்கு தீர்வாக, தமிழ்த் தேசிய இனமக்கள், தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தனித்தமிழீழ அரசு அமைப்பதற்கான போராட்டம் தொடங்கி 25 ஆண்டுகளாகிவிட்டது. தமிழீழ அரசு பலாத்காரப் புரட்சி மூலம்தான் நிறுவ முடியும் என்ற அரசியல் நிலைப்பாட்டில் இருந்து தொடங்கப் பட்ட ஆயுதப் போராட்டமும், தேசிய விடுதலை யுத்தமும் கூட 25 ஆண்டுகளை தொட்டுவிட்டது.

சிறீலங்கா இனவாத அரசுக்கு எதிராக, தமிழ் மக்கள் தமது தேசிய இன சமத்துவத்துக்கான அரசியல் கோரிக்கைகளை முன்னிறுத்தி வெகு சனப் போராட்டங்களை (அகிம்சை) நடத்திய போதும், அப்போராட் டங்களை நடத்திய தமிழ் அரசியல் கட்சிகளுடன் - சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறது, ஒப்பந்தம் செய்திருக்கிறது, ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தாமல் சிங்கள இனவாத கட்சி களும், அரசும் மீறியிருக்கின்றன. தமிழ் அரசியல் கட்சிகளும், மக்க ளுக்கு அளித்த வாக்குறுதிகளை கைவிட்டு, சிறீலங்கா அரசுடன் சம ரசம் செய்திருக்கின்றன. துரோகம் இழைத்திருக்கின்றன. தங்களின் சுரண்டும் ஆதிக்க வர்க்க நலன்களுக்காக - பாராளுமன்ற ஆசனங்களுக் காக.

இத்தகைய துரோக பாராளுமன்ற தலைமைகளை தூக்கி எறிந்து, இளைஞர்களும் - மாணவர்களும் உருவாக்கிய ஆயுதப் போராட்டமா னது, தமிழீழ அரசை அமைப்பதற்கான தேசிய விடுதலை யுத்தமாக வளர்ந்தது. சிறீலங்கா அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் தொடங் கியதில் இருந்து இன்றுவரை, ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கத் தலைமைகளுடனும் - சிறீலங்கா அரசு போர்நிறுத்தம் செய்தி ருக்கிறது. பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. ஆனால் இந்தியரசு முன்னி லையில் தொடங்கிய திம்புப் பேச்சு வார்த்தை பின்னாளில் இந்திய - இலங்கை ஒப்பந்தமாகவே முடிந்தது. பாராளுமன்ற தரகு முதலாளித் துவ தமிழ்க் கட்சிகள், அகிம்சைவாதிகள் மட்டுமல்ல. குட்டி முதலா ளிய ஆயுதப் போராட்ட தலைமைகளும், தமிழீழ மக்களின் அரசியல்

www.tamilarangam.net



அபிலாசைகளுக்கு, தாங்கள் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு துரோகம் இழைத்து சிறீலங்கா பாராளுமன்ற ஆசனங்களுக்கு சென்றனர்.

ஆயுதப் போராட்டம் தொடங்கியதில் இருந்து இன்றுவரை ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' LTTE இயக்கமும் - அதன் தலைமையும், தமிழீழ அரசை நிறுவுவதற்கான தமிழீழ மக்களின் அரசியல் இலக்கை நோக்கி தொடர்ந்து போராடி வருகின்றனர். சிறீலங்கா அரசுடன் பல போர் நிறுத்தங்களை, பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளனர். ஆனால் எதிரியின் பொறிக்குள் சிக்காமல், போர் நிறுத்தங்களை - பேச்சு வார்த்தைகளை தமிழீழப் போராட்டத்தை - தங்களை மேலும் வளர்ப்பதற்கான வாய்ப்புக்களாக பயன்படுத்தியுள்ளனர். புலிகள் தங்களின் அரசியல் இலட்சியத்தை நோக்கி விடுதலை யுத்தத்தையும் - அரசியல் பேச்சு வார்த்தைகளையும் முன்னோக்கி நகர்த்தி வந்துள்ளனர்.

புலிகள் தேசிய விடுதலை யுத்தத்தின் தீவிரமான வளர்ச்சிக்கும், அரசியல் பேச்சு வார்த்தைகளின் நீடித்த வெகுசன போராட்ட திரட்சிக்கும், பல பங்கங்களை தவறுகளை இழைத்திருக்கிறார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

இதுவரை கால போர் நிறுத்தங்கள், பேச்சு வார்த்தைகளைவிட நோர்வே அரசு முன்னிலையில் ஏற்பட்டுள்ள தற்போதைய போர் நிறுத்தம், பேச்சு வார்த்தைக்கான பேச்சு வார்த்தை'', தாய்லாந்து பேச்சு வார்த்தைக்கு முன்பாக புலிகள் பெற்றுள்ள வெற்றிகள். (பொருளாதார தடை நீக்கம் முதல் புலிகள் மீதான தடை நீக்கம் வரை செல்லலாம்) மிகவும் வித்தியாசமானவை - விசித்திரமானவை. எதிரிகள் வைத்துள்ள பொறியும் மிகவும் சூழ்ச்சியானது. சாதுரியமானது.

புலிகள் தங்களின் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில், முழுமையான அரசியல் - இராணுவ ஆதிக்கத்தை பெற்றிருப்பதுடன், அரசின் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் புலிகள் அரசியல் வேலை செய்ய அனுமதியளித்திருப்பது, அன்டன் பாலசிங்கம் சர்வதேச அளவில் சுதந்திரமாக சென்று, பேச்சு வார்த்தைக்கான அரசியல் தயாரிப்புக்களில் ஈடுபட உதவியளிப்பது, புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு 'சமாதான நல் எண்ண (?) இராஜ தந்திரிகள் சென்று வர அனுமதி கொடுத்திருப்பது, புலிகளின் தலைவர் பிரபாகரன் உள்நாட்டு - உலக ஊடகங்களை, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்திருப்பது... எனப் பல

www.tamilarangam.net



விடயங்கள் போர் நிறுத்தக் காலத்திலேயே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ''பொங்கு தமிழ் எழுச்சி'' என்ற ஒரு வெகுசன அரசியல் எழுச்சி தமிழீழப் பகுதி முழுவதும், அரசியல் பேச்சு வார்த்தைக்கு முன்னதாகவே வெடித்து விஸ்தரித்திருப்பது.

புலிகள் இயக்கம் ஒரு சுத்த இராணுவவாத இயக்கம், மக்களை அரசியல் மயப்படுத்தாத, அதற்கு எதிரான இயக்கம். மற்றைய அரசியல் கட்சிகளை - இயக்கங்களை அழித்தொழிக்கின்ற இராணுவச் சர்வாதிகார இயக்கம். இவை அனைத்தையும் புலிகளின் தலைமை போராட்டத்தில் செய்து காட்டியதும் கூட, ஒருவகையான அரசியல் மார்க்கம் தான் என்பதை புரிந்து கொள்ளாதவர்கள், புலிகளின் இன்றைய வெளிப்படையான அரசியல் நடவடிக்கைகளைப் பார்த்து பெருமகிழ்ச்சி அடைகின்றனர். ''புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள்'' என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கீகரித்தது. புலிகளும் - சிறீலங்கா அரசும் பேசி சமாதானத்தை, அமைதியை கொண்டு வரவேண்டும் எனக் கூறி வருகின்றது. இதனால்தான் புலிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தங்களின் அரசியல் இலக்கு நோக்கி நகர்த்த முயன்று வருகிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புலிகளின் வழிகாட்டுதலை மீறி செயற்படாத ஒரு நெறிப்படுத்தப்பட்ட கூட்டமைப்பாக மாற்றுவது பற்றிய தர்க்கங்கள் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கூட்டமைப்புக்குள் உள்ள பாராளுமன்ற அரசியல் கட்சிகள், புலிகளை, தமிழ் மக்களின் - போராட்டத்தின் ஏகப்பிரதிநிதிகள் என்று அறிவிப்பது உண்மையானால் முதலில் அவர்கள் செய்ய வேண்டியது, தங்களது கட்சிகளை - இயக்கங்களை கலைத்துவிட்டு புலிகளுடன் சேர வேண்டும் அல்லது புலிகள் உருவாக்குகின்ற அரசியல் கட்சிக்குள் முழுமையாக இணைய வேண்டும். அதன்பின்னர்தான், புலிகளை ஏகப்பிரதிநிதிகள் என்று சொல்ல வேண்டும்.

கூட்டமைப்பிலுள்ள இக்கட்சிகள், புலிகளால் தாங்கள் அழிக்கப்பட்ட போது - தடைசெய்யப்பட்ட போது, புலிகளின் தடை - அழித்தொழிப்பை மீறி, தாங்களும் தமிழீழ மக்களின் பிரதிநிதிகள் என்ற துணிச்சலுடன், மக்கள் மீதான விசுவாசத்துடன், மக்களுடன் ஐக்கியப்பட்டு நின்று புலிகளின் தவறை மக்களுக்கு உணர்த்தியவர்கள் அல்ல. பொது எதிரியான சிறீலங்கா அரசை எதிர்த்து தொடர்ந்து போராடியவர்கள் அல்ல.

www.tamilarangam.net



''முதலில் புலிகளை அழிப்பது, பின்னர் தமிழ் மக்களுக்காக போராடுவது'' என்ற - துரோக வழியை முன்வைத்து இந்தியப் படைகளுடன் சிறீலங்காப் படைகளுடன் கூடிச் செயற்பட்டவர்கள், ஆயிரக்கணக்கான போராளிகளை, புலிகளுக்கு பலி கொடுத்த தலைமைகள், போராளிகளை போராட்டத்தை விட்டு 'துரோகிகள்' பட்டத்துடன் அன்னியப்படுத்திய தலைமைகள், இன்று 'புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள்' என்று கூறிக் கொண்டு, தங்களின் தலைமை அதிகாரத்தையும், பாராளுமன்ற ஆசனங்களையும், தங்களின் எல்லை கடந்த பெரும் சொத்துக்களையும் பாதுகாக்க முயல்கின்றனர்.

தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்ற புலிகளையும், 'சமாதான சனநாயக(?) நீரோட்டத்தில் கலக்க உதவியளித்துவிட்டு, தங்களின் பாராளுமன்ற கதிரைகளை பாதுகாத்துக் கொள்ள, தமிழ்த் தேசியம் பேசுகின்றனர். கூட்டமைப்பின் ஒரு சில தலைவர்களின் நேர்மை நாணயம் அல்ல, தமிழ் மக்களுக்கு முக்கியமானது கூட்டமைப்பின் அரசியல் கோரிக்கை எத்தகையது? எப்படி தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்துகிறது? என்பதுதான்.

சிறீலங்கா அரசின் ஒடுக்குமுறை யுத்தத்தையும், புலிகளின் அழித்தொழிப்பையும் ஒரே நேரத்தில் எதிர் கொள்ள வேண்டியிருந்த போது கூட, தங்களுக்குள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த முடியாமல் போன இத்தலைமைகள் இன்று 'தமிழ்த் தேசிய கூட்டமைப்பை' உருவாக்கி இருப்பது, பட்டறிவா? தீர்க்கதரிசனமா? ஏமாற்றா?

புலிகளின் தலைமை கூட, சிறீலங்கா அரசை எதிர்த்து போராடிக் கொண்டிருந்த சக இயக்கங்களை அழித்தும், தடை செய்தும் போராட்டத்தின் தொடக்க காலங்களில் இருந்து, தனது தனி இயக்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டி வந்தது. மற்றைய இயக்க தலைமைகள் போராட்டத்தை கைவிட்டு, எதிரியுடன் சமரசப்பட்ட போதும், அத்தலைமைகளை அன்னியப்படுத்தி அவ்வியக்கங்களில் இருந்து கீழ் அணிப் போராளிகளை தங்களுடன் இணைத்துக் கொண்டு போராட்டத்தை பலப்படுத்த ஏன் தவறியது? யுத்தத்தில் மனிதவளப் பிரச்சினைகளை சமனிலைப்படுத்த ஏன் மறுத்தது? வயது குறைந்த சிறுவர் சிறுமிகளை இணைக்க எடுத்த முயற்சியளவுக்கு, ஏனைய இயக்கங்களின் தலைமையை புறக்கணித்த பயிற்சி பெற்ற போராளிகளை, விசேட அமைப்

www.tamilarangam.net



புமுறைகள் மூலம் ஏன் இணைக்கவில்லை? தமிழ்த் தேசிய கூட்ட மைப்பை, அதன் தலைவர்களை, தேசியத்தை நோக்கி முன்னேற கையாள முடிகின்ற புலிகளின் தலைமைக்கு, சாதாரண போராளிகளை தேசிய விடுதலைப் போரின் வளர்ச்சி நோக்கி அரவணைத்துச் செல்ல முடியாமல் போனது விசித்திரமானது.

சிறீலங்கா அரசுக்கு எதிரான போராட்டத்தில் உறுதியாக நின்றபடி மற்றைய அரசியல் சக்திகளை அழித்து தடைசெய்து போர்களத்தில் தனது ஆதிக்கத்தை - ஏகபோகத்தை நிறுவிக் கொண்ட புலிகளின் தலைமை; இன்று தங்களின் ஏகபோகத்தை ஏகப்பிரதிநிதித்துவத்தை அங்கீகரிக்கின்ற, மற்றைய அரசியல் கட்சிகளை மட்டும் செயற்பட அனுமதிக்கும் முதிர்ச்சி நிலைக்கு வந்திருக்கிறது என்பது மட்டும் உண்மை. இன்றுவரை புலிகளின் தலைமை, தமிழீழ மக்களின் தனிய ரசு அமைக்கும் அரசியல் இலட்சியத்துக்காக, தேசிய விடுதலை அரசி யலில் உறுதியாக நிற்கின்ற சிறீலங்கா அரசை - வல்லரசுகளை எதிர்த்து அரசியல் அரங்கில் போராடி வருகின்ற - ஆயுதப் போராட்டத்துக்கு தயாராகவுள்ள தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக அமைப்புக்களை கட்சிகளை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கவில்லை. தமிழீழ மக்கள் மத்தியில் வெளிப்படையாக இயங்க விடுவதில்லை. ''பொங்கு தமிழ் எழுச்சியை'' தொடர்ந்து, தன்னெழுச்சியாக நடந்து வரும் மக்கள் போராட்டங்களில் கூட, புலிகளின் அரசியலுக்கு முர ணான அரசியல் சக்திகள், புரட்சிகர சக்திகள் இருக்கின்றனவா என்பதை புலிகள் உன்னிப்பாக கவனிக்கின்றனர்.

''புலிகளின் தலைமை தொடர்ந்து தமிழீழ மக்களின் தேசிய எழுச்சியை; தேசிய விடுதலைப் போரை பலப்படுத்த முயல்கி றார்கள்'' இதுதான் அவர்களின் உட்திட்டம் எனில், தேசிய விடு தலைப் போராட்டத்தில் என்றும் எதிரியின் பக்கம் சாராத புரட்சிகர தேசிய விடுதலை சக்திகளை அமைப்புகளை, கட்சிகளை சுதந்திரமாக இயங்குமாறு, வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். நல்லெண்ண நடவடிக்கைகளை வெளிப்படையாக வெளிப்படுத்த வேண்டும்.

1990-ம் ஆண்டில் வடக்கில் இருந்து 80,000 முசுலீம் மக்களை காலக் கெடு விதித்து 24 மணி நேரத்தில் வெளியேற்றி, உள்நாட்டில் அவர் களை அகதிகளாக்கியது புலிகள் இயக்கம். புலிகளின் மிகப் பெரும் தவறை, தேசிய விடுதலைப் போராட்டத்தை பலயீனப்படுத்திய நிகழ்வு இது. எதிரிகளைப் பலப்படுத்திய இந்த நடவடிக்கையைத்

www.tamilarangam.net



தொடர்ந்து சுட்டிக் காட்டி, கண்டித்து வந்த, தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும், தங்களின் வரலாற்று ரீதியான வாழ்விட உரிமைக்காக பலமுனைகளிலும் புலிகளுக்கு நிர்பந்தம் கொடுத்து வந்த முசுலீம் மக்களின் அரசியல் போராட்டமும்தான் இன்று புலிகளின் தலைமையை "முசுலீம் மக்களை வெளியேற்றியது தங்களின் அரசியல் தவறு" என ஒப்புக் கொள்ள வைத்துள்ளது. புலிகள் தமது தவறை ஒப்புக் கொண்டிருப்பது முதல் கட்ட நடவடிக்கை மட்டுமே.

அரசு கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் இறங்கி அரசியல் வேலை செய்வது போர்நிறுத்தத்தின் ஒரு அம்சம் எனில், பேச்சுவார்த்தைக்கு முன்பாக புலிகளால் வெளியேற்றப்பட்டு அகதிகளாகவுள்ள முசுலீம் மக்கள் தங்களின் சொந்த வாழ்விடங்களில் குடியமரும் நிகழ்ச்சி தொடக்கப்படவேண்டும், அத்தகைய செயலை புலிகள் முன்முயற்சி எடுத்து செய்தால் பேச்சு வார்த்தையில் தமிழீழ மக்களின் தரப்பு நியாயம் மேலும் பலம் பெறும். சொந்த வாழ்விடங்களுக்கு திரும்பும் முசுலீம் மக்கள் வடகிழக்கு மக்களின் போராட்டங்களில் தங்களையும் இணைத்துக் கொள்வார்கள். தமிழீழத்தில் வெகுசன எழுச்சிகள் புது வடிவம் பெறும்.

— திலீபன்

www.tamilarangam.net



# நிரந்தர யுத்த நிறுத்தம்! தமிழ்நாட்டில் தங்கியுள்ள, தமிழீழ அகதிகளின் கோரிக்கை

இலங்கையில், சிறீலங்கா அரசின்; தமிழ் இனம் மீதான இனப்படு கொலை - இன அழிப்பு யுத்தம் தொடங்கியதில் இருந்து இன்று வரை மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள், அகதிகள். இன்று வரை யுத்த பூமியில் வாழும் மக்கள் - இடம் பெயர்ந்த மக்கள், தங்களின் சொந்த வீடு வாசல்களை - வயல்களை விட்டு வெளியேறி, வேறு இடங்களில் இலங்கைக்குள்ளேயே இடம் பெயர்ந்து வீடுகளிலும் - முகாம்களிலும் வாழும் தமிழ்-முசுலீம் மக்கள் ஒரு பக்கம், இந்தியாவில் முகாம்களில், சிறப்பு முகாம்களில், வீடுகளில் அகதிகளாக இருப்பவர்கள் இன்னொரு பக்கம். இலங்கையிலும் - இந்தியாவிலும் அகதி முகாம் களில் வாழ்க்கை நடத்தும் மக்களின் வாழ்நிலைத் துயரம் கொடுமை யானது, கொடூரமானது.

''ஊரில் யுத்தப் பகுதியிலேயே இருந்து இறந்தாலும் பரவா யில்லை'' என்று கண்ணீர் வடிக்கும் அளவுக்கு அகதி முகாம் வாழ்க்கையில், மனித வாழ்வின் அத்தனை அம்சங்களிலும், அவ லங்கள் அச்சுறுத்துகின்றது. ஆயுதம் தாங்கிய இயக்கங்களின் தலை மைகள் 'விடுதலை' எனக் கூறி கை கழுவிவிட்டது ஒருபுறம். தொண்டு நிறுவனங்களின் (NGO) தலைமைகள் ஏமாற்றி சுருட்டிக் கொண்டிருப் பது மறுபுறம். 'சமாதானப் பிரச்சாரத்துக்கு இன்று பணம் திருப்பப்ப டுவதால்' அகதிகளின் நிவாரண - வளர்ச்சி திட்டங்களுக்கு பணம் பற்றாக்குறை ஆகிவிட்டது.

அகதி முகாம்களில், நிதி - பொருள் கொடுப்பனவுப் பற்றாக்குறை மற்றும் காலக்கிரமம் இல்லாத நிலை, உணவுப் பற்றாக்குறை, வீடு களின் பராமரிப்பு இன்மை, கல்விப் பிரச்சினை, மருத்துவ வசதி இன்மை, போக்குவரத்துச் சிக்கல், வேலையின்மை, சரியான கூலி இல்லை, வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாத நிலை, புதிய கடன் இல்லை, அதிகாரிகளின் இலஞ்ச ஊழலுக்கு கப்பம் கட்ட வேண்டிய நிலை, இவற்றைப் பற்றி பேசினால், 'ஆட் காட்டிகள்' ஆட்காட்ட சிறப்பு முகாம்களுக்கும், தேவையானால் சிறைகளுக்கு கூட அனுப்பி

www.tamilarangam.net



விடுவார்கள், அதிகார வர்க்கத்தின் கொடும்கோலர்கள். அகதிக் குழந்தைகள் கூலித் தொழிலாளர்களாக மாற்றப்படுகிறார்கள். வழியற்ற நிராதரவான பெண்கள் (பாலியல் தொழிலாளர்கள்) விபச்சாரத் தொழிலுக்கு தள்ளப்படுகிறார்கள். எதையும் செய்ய முடியாதவர்கள் தற்கொலைக்கு வழிதேடுகிறார்கள்.

ஆனால் இவற்றைப் பற்றி அக்கறைப்படாத, அலட்டிக் கொள்ளாத சில முகாம் தலைவர்கள், முன்னாள் போராளிகள், மித மிஞ்சிய மத உணர்வாளர்கள். முகாம்களில் இந்துக் கோயில்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும் கட்ட கட்டாய வசூல் கொள்கை (கொள்ளை)யில் ஈடுபடுகிறார்கள். இதற்கு தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் கூட பத்தாயிரம் வரையில் பணம் கொடுக்கிறார்கள். தங்கள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் மத போதையில், அல்லது குடி போதையில் மூழ்குவதை இத்தலைவர்களே ஊக்குவிக்கிறார்கள். அயோத்தி செல்ல R.S.S. கரசேவர்களை உருவாக்குவது போல், அகதிகள் மத்தியிலும் கர சேவகர்கள், கன்னியாஸ்திரிகள் உருவாக்கப்படுகிறார்கள். அகதிகளின் வாழ்க்கை அவலத்தை, முகாமை மதவாதிகள், தங்களின் மதவெறிப் பசியை தீர்ப்பதற்கான விளைநிலைமாக்கி விடுவார்களோஎன்ற அச்சம் எழுந்திருக்கிறது.

அகதிகள் நாடு திரும்ப, அரசியல் பேச்சு வார்த்தை வெற்றி பெற நாம் முயலவேண்டும். அகதி முகாம்களில் 'ஆலயம்' கட்ட செலவழிக்கும், அகதிகளின் 'சக்தி', அகதி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும். அரசியல் கோரிக்கைகளின் பக்கம் திருப்பப்படவேண்டும். அகதிகள், அகதி முகாம்களுக்கு வெளியிலுள்ள, தமிழ்நாட்டின் எல்லா ஆலயங்களுக்கும் சென்று வர - வழிபட அனுமதியுள்ளது. எனவே, அகதிமுகாம்களில் ஆலயம் வேண்டாம், அகதி வாழ்வு முடிவுக்கு வர வேண்டும், நீதியான அரசியல் தீர்வு வேண்டும் என அகதி முகாம்களில் முழக்கங்கள் எதிரொலிக்க வேண்டும். முகாம்களில் பொங்கு தமிழ் எழுச்சி பெற வேண்டும்.

சிறீலங்கா அரசின், ஆக்கிரமிப்பு யுத்தம் நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும். தமிழீழ மக்களின் நீதியான அரசியல் கோரிக்கைகள் தீர்க்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் சுதந்திரமாக, தங்கள் தாய் மண்ணில் மீண்டும் வாழவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர்கள் அகதி முகாம் மக்கள். அகதி முகாமிலுள்ள மக்களின் இன்றைய வாழ்க்கை மட்டுமல்ல. எதிர்கால வாழ்க்கையும் கேள்விக்குறியாக

www.tamilarangam.net



நிற்கிறது. தங்களின் சுபிட்சமான பொருளாதார - சமூக சமத்துவமான வாழ்க்கைக்காக தொடர்ந்து போராடி வாழவேண்டியுள்ளது.

''யுத்தம் தொடர்ந்தால்தான்'' தங்களால் தொடர்ந்தும் அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வாழ, அவ்அரசுகள் அனுமதிக்கும் என்ற நிலையில் புலம் பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் உள்ளனர். இந்தப் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும், அடிநிலையிலுள்ள தமிழீழ அகதிகளுக்கும் இடையில், ''யுத்தம், யுத்தத்தின் தேவை, யுத்த நிறுத்தத்தின் அவசியம் - நீதியான யுத்தத்தை ஆதரிப்பது'' என இவற்றில் எதிரும் புதிருமான பார்வைகள், எதிர்பார்ப்புகள் இருக்கிறது.

சிறீலங்கா அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நிரந்தர யுத்த நிறுத்தம், தமிழீழ அகதிகளின் வாழ்க்கையில் 'பெரும் எதிர்பார்ப்பை' ஏற்படுத்தியுள்ளது. புதிதாக ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு கட்சியும், கடந்த காலத்தில் எப்படி ஏமாற்றியுள்ளன. யுத்த நிறுத்தம் - பேச்சு வார்த்தை - பொருளாதார தடை நீக்கம், ஒப்பந்தங்கள் எவ்வாறு மீறப்பட்டன என்பதையும் அகதிகள் அறிவார்கள்.

யுத்த நிறுத்தத்தை நம்பி முதலில், நம்பிக்கையுடன் நாடு திரும்பும் அகதிகள். யுத்தம் மீண்டும் வெடிக்கும் போது மீண்டும் நாட்டைவிட்டு முதலில் வெறியேறும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதனால் தமிழ் அரசியல்வாதிகளும், அதிகாரவர்க்கமும், ஊடகங்களும் எவ்வளவுதான் நம்பிக்கையூட்டும் வகையில் பேசினாலும் அகதிகள் எச்சரிக்கையுடன் இருக்கிறார்கள்.

சிறீலங்கா அரசு யுத்த நிறுத்தத்துடன் நின்றுவிடாமல், தமிழீழ மக்களின் நீதியான அரசியல் கோரிக்கைகளை தீர்க்க முன்வர வேண்டும், தமிழீழத்தின் ஒவ்வொரு பிரிவு மக்களும் தங்களின் வாழ்வுக்கான உரிமைகளை நிலைநாட்ட போராடுகின்றனர். மீனவர்களின் போராட்டம் பிரசித்தமாகியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அகதிகள், தங்களின் அகதி வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியுள்ளது. தமிழீழ அகதிகள் முன்னிறுத்தும் கோரிக்கைகளை, சிறீலங்கா அரசு அங்கீகரிக்க வேண்டும். இந்தியரசு இதை உறுதிப்படுத்தும்போது தமிழ் நாட்டிலுள்ள அகதிகள் ''மீண்டும் அகதிகளாக்கப்பட மாட்டோம்'' என்ற நம்பிக்கையுடன் அதற்கான உத்தரவாதத்துடன் தாய் மண்ணுக்கு திரும்புவார்கள்.

www.tamilarangam.net



## இந்தியாவிலுள்ள தமிழீழ அகதிகள் அனைவரும் நாடு திரும்ப வேண்டின் அகதி மக்களின் 15 அம்ச கோரிக்கைகளை சர்வதேச சமூகத்தின் முன் சிறீலங்கா அரசு அங்கீகரிக்க வேண்டும்

**1.** வடக்கு - கிழக்கு முழுவதும் முழுமையான நிரந்தர யுத்த நிறுத்தமும், இனப்பிரச்சனைக்கு சரியான நிரந்தர அரசியல் தீர்வும் ஏற்பட வேண்டும். அதுவரை யுத்த நிறுத்தத்தை மட்டும் காட்டி அகதிகளை அழைப்பதை கைவிட வேண்டும்.

**2.** இந்தியாவில் சிறப்பு முகாம்களில், சிறைகளில் உள்ள தமிழீழ, மலையக முன்னாள் போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும். அவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விரும்பிய பகுதியில் குடியேற அனுமதிக்க வேண்டும்.

**3.** அகதிகளின் சொந்த வீடுகளில், விவசாய நிலங்களில், மீன்பிடிக்கும் கடல் பகுதியில் உள்ள கண்ணி - மிதி வெடிகள் முழுமையாக அகற்றப் பட்டிருக்க வேண்டும்.

**4.** நாடு முழுவதும் அகதிகள் சுதந்திரமாக நடமாடுவதற்கான அடையாள அட்டையும், அனுமதிச் சீட்டும் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கான அனுமதியுடன் உடனடியாக வழங்க ஒப்புக் கொள்ள வேண்டும். தின சரி / வாரம் அனுமதிச் சீட்டு வழங்கும் முறை நிறுத்தப்படவேண்டும்.

**5.** நாடு திரும்பும் அகதிகளின், நாட்டுக்கு வெளியே பிறந்த குழந்தைகளுக்கு இலங்கைக் குடியுரிமையும், அகதிகளுக்கு முழுப் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.

**6.** நாடு திரும்பும் அகதிகள், வரவேற்பு முகாம்களிலிருந்து நேரடியாக அவர்களின் சொந்த இருப்பிடங்களுக்கு செல்ல போக்குவரத்து உதவி ஏற்பாடு செய்யவேண்டும். தற்காலிக முகாம்களில் ஒரு மாதத்துக்கு மேல் தங்கவைக்கக் கூடாது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் குடியமர்வுப் படி 5,000/- ஒரே தவணையில் வழங்கவேண்டும்.

**7.** தற்காலிக முகாம்களில் அகதிகளுக்கான உணவுப் பங்கீடு, உதவித் தொகை தெளிவாக முன்னதாக தீர்மானிக்கப்படவேண்டும், சொந்த இருப்பிடங்களுக்கு சென்ற பின்னர் 6 மாதம் வரை எல்லா அகதிக

www.tamilarangam.net



ளுக்கும் அதே அளவு உணவுப் பங்கீடு இலவசமாக வழங்கவேண்டும். உணவுவில்லை (Food - Stamps) ஆக வழங்கலாம்.

**8.** எல்லா அகதிகளுக்கும் அனைத்து நோய்களுக்குமான மருத்துவ வசதி இலவசமாக வழங்குவதுடன் குழந்தைகளுக்கும் + கர்ப்பிணி தாய்மார்களுக்கும் சிறந்த ஊட்டசத்தும் வழங்கவேண்டும்.

**9.** சொந்த இருப்பிடம் திரும்பிய அகதிகள், தற்காலிகமாக குடியிருப்பு அமைத்திட 25,000/-ம் வீட்டைத் திருத்தி கட்ட தவணைக் கொடை 50,000/-ம் வழங்கவேண்டும். புதிதாக வீடு கட்ட வேண்டியவர்களுக்கு 1,00,000 முதல் 2,50,000 ரூபா வரை 15 ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் வட்டியில்லாக் கடன் வழங்கவேண்டும்.

**10.** அகதி முகாமிலுள்ள விவசாயிகள், மீனவர்கள், சிறுவியாபாரிகள், கைத்தொழில் செய்வோர் வாங்கிய, பழைய வங்கிக் கடன் முழுவதும் இரத்து செய்யப்படவேண்டும்.

**11.** நாடு திரும்பும் அகதிக் குழந்தைகளுக்கு 5-ம் வகுப்பு வரையிலான கல்விக்கட்டணம், பரிட்சைக் கட்டணம் கூட அறவிடாது அனைவருக்கும் இலவசக் கல்வி கொடுக்க வேண்டும். ஆரம்பக் கல்வி கற்றலுக்கான வயது எல்லைகள் கூட தேவையைப் பொறுத்து மாற்றி அமைக்க வேண்டும். இந்தியாவில் கல்வி கற்றபடி நாடு திரும்பும் மாணவ - மாணவியர்க்கு தொடர்ச்சியான, அடுத்த வகுப்புக்கான கல்வி கொடுக்க வேண்டும்.

**12.** பொது மன்னிப்பு வழங்கப்பட்டு நாடு திரும்பும் முன்னாள் போராளிகளுக்கு, அரசின்; வடக்கு - கிழக்கின் பாதுகாப்பு படை வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கவேண்டும். தொழிற்கல்வி பயிற்சி இலவசமாக வழங்க வேண்டும்.

**13.** விவசாயிகள், மீனவர்கள், சிறுவிவசாயிகள், சுயதொழில் முனைவோருக்கு அரசு 1,00,000 முதல் 5,00,000 வரை 6% வட்டியுடன் 10 ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் கடனாக வழங்கவேண்டும். சுய தொழில் முனைவோருக்கான மொத்த கடனில், அகதி முகாம்களில் சுயதொழில் பயிற்சி முடித்தவர்களுக்கு கடன் முன்னுரிமை கொடுக்க வேண்டும். மீனவர்களிடம் பறிமுதல் செய்த படகு, வள்ளம், வலை திருப்பிக் கொடுக்கவேண்டும் அல்லது அதற்கான நஷ்டஈடு வழங்க வேண்டும்.

www.tamilarangam.net



**14.** நாடு திரும்பும் அகதிகளுக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தில் தகுதி அடிப்படையில் முன்னுரிமை வேலை வழங்குவதுடன் அரசு, தனியார் வேலைவாய்ப்பில் கடைநிலை வேலைகளில் சேர்த்துக் கொள்ள உத்தரவாதம் கொடுக்க வேண்டும். இதிலும் தேவைப்படின் வயது வரம்பு மாற்றியமைக்க வேண்டும். இந்தியாவில் உயர்கல்வி, இளநிலை - முதுநிலை பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். குறிப்பாக முகாம்களிலிருந்தும், அரசு உதவி பெற்றும் படித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், அரசு பணியாளர்களாக இருந்தவர்கள் அதே பணியில் தொடர்ந்து ஈடுபட அனுமதிக்க வேண்டும்.

**15.** அகதிகளாக கடல் தாண்டுகையிலும், யுத்தத்திலும் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கும், உடல் ஊனமுற்றவர்கள், கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கும், பிள்ளைகளை இழந்த 50 வயது தாண்டிய வயோதிபர்களுக்கும் பொதுநல விடுதி, வடக்கிலும் - கிழக்கிலும் தனித்தனியாக கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். உணவு, உடை, உறையுள், சுகாதாரம், பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முழுப் பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும்.

## இந்தியாவிலுள்ள தமிழீழ அகதிகள் இலங்கைக்கு திரும்ப வேண்டின் இந்திய மத்திய - மாநில அரசுகள் அகதி மக்களின் 6 அம்ச கோரிக்கைகளை அங்கீகரித்து ஆதரவளிக்க வேண்டும்

**1.** 15 அம்ச கோரிக்கைகளை அகதி முகாம்களிலும், முகாமுக்கு வெளியிலுள்ள அகதிகள் மத்தியிலும் முன்வைத்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்யவும், அகதிகளை அக்கோரிக்கைகளுக்காக ஒன்று திரட்டவும், பொதுக் கருத்தை உருவாக்குவதற்கான அகதிகளின் அடிப்படை சனநாயக உரிமைகளை அங்கீகரித்து அனுமதியளிக்க வேண்டும்.

**2.** சிறீலங்கா அரசுக்கு தமிழீழ அகதிகள் முன் வைத்துள்ள நீதியான 15 அம்ச கோரிக்கைகளை, சிறீலங்கா அரசு அங்கீகரிக்கும் வரை, சிறீலங்கா அரசுடன் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான எந்தப் பேச்சு வார்த்தைகளையும், ஏற்பாடுகளையும், ஒப்பந்தங்களையும் இந்தியரசு

www.tamilarangam.net



செய்யக்கூடாது. மறுபுறம் அகதிகளை வெளியேற்ற எந்த வகையிலும் நிர்ப்பந்திக்கக் கூடாது.

**3.** சிறீலங்கா அரசு, அகதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் இலங்கைக்கு திரும்பும் போது, அகதிகளிடம் இருந்து மத்திய-மாநில அரசுகள் பறிமுதல் செய்யப்பட்ட படகு, வள்ளங்களை அகதிகளிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

**4.** தமிழ்நாட்டில் சிறப்பு முகாம்களிலும், சிறைகளிலும் உள்ள முன்னாள் போராளிகளுக்கு, சிறீலங்கா அரசு வெளிப்படையாக பொது மன்னிப்பு அளித்து ஏற்றுக் கொள்ளாதவரை, சிறீலங்கா அரசின் கைகளில் அவர்களை ஒப்படைக்கக்கூடாது.

**5.** ஆண்டுக்கு ஒருமுறை அகதி முகாமிலுள்ள குடும்பங்களுக்கு உடைகளும் - சமையல் பாத்திரங்களும் மண்டபம் முகாமில் வழங்கப்படுகிறது. இந்நடைமுறையை எல்லா முகாம்களுக்கும் அமுல்படுத்த வேண்டும். உற்றார் உறவினர் வதிக்கும் முகாம்களுக்கு தமது பதிவை மாற்றம் செய்ய விரும்புவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும். மழையையும் - வெய்யிலையும் தாங்க முடியாத நிலையிலுள்ள வீடுகளை திருத்தி அமைத்து கொடுக்கவேண்டும். அகதி மாணவர்களுக்கு இலவச சத்துணவும், இலவச பாடநூல், அப்பியாச புத்தகம் வழங்கும் திட்டத்தை முறையாக கண்காணித்து அமுல்படுத்த வேண்டும். இது போன்ற அகதிமக்களின் பிரச்சினைகளை தமிழ்நாட்டு அரசும், மறுவாழ்வுத்துறையும் மனித நேயத்துடன் உடனடியாக தீர்க்க வேண்டும்.

**6.** இந்திய மத்திய - மாநில அரசுகளின், அரசியல் சாசன ரீதியான சட்டத்திட்டங்களுக்கும், அய்நா சபையின் அகதிகளுக்கான மனிதவுரிமைக் கொமிஷனின் UNHCRஇன் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டும் இவ் 21 அம்ச கோரிக்கைகளுக்காக செயல்படும் தமிழீழ அகதிகளை சுதந்திரமாக செயல்பட மத்திய - மாநில அரசுகள் அனுமதியளிக்க வேண்டும்.

தமிழ்நாட்டு கிளை
தமிழீழ புதிய சனநாயக கட்சி

www.tamilarangam.net

தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)

# தேசபக்தன்

"சிறு துளி பெரு வெள்ளம்" அன்பளிப்பு 20 உருபா / வெளிநாடு 1 $ டொலர்

தமிழீழ புதிய சனநாயக கட்சி தி.பி. 2032 (2002) இதழ் 22

மடல் தொடர்புகளுக்கு மட்டும்

EDITOR
67, PARKWOOD
VILLEGE DR
# 308 DONMILLS
ONTARIO
M 34 2x4
C A N A D A

T. ARASAN
POST BOOKS-256
NYBORG
5871 BERGEN
N O R W A Y

e.mail: Patriot_editor@Yahoo.com

www.ndpt.org

RGSD.ISSN-07647-2262 RNI 04512/1999 CANADA

N D P T

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT

# தேசபக்தன்

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT



Covered in a cloud of smoke, a Greenpeace protester wearing a cutout mask of the U.S. President, Mr. George Bush, holds a frying pan with a globe inside it, during a protest against the U.S. stand on the Kyoto Treaty, in front of the U.S. Consulate in Sao Paulo, Brazil... worrisome attitude.

**NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM**

# N D P T

**NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்